# தமிழர் பண்பாட்டில் மார்கழி ஒரு மரபுத் திங்கள்



பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டு மரபுகள்
# ஒரு மறுபக்கச் சிந்தனை

தொகுதி – 1

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டில் மார்கழி
# ஒரு மரபுத் திங்கள்

**கோகுலம் – 1**

**2017**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தமிழர் பண்பாட்டில் மார்கழி ஒரு மரபுத் திங்கள் |
| நூலாசிரியர் | : | பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ்<br>முன்னாள் ஆய்வுநிலைப் பேராசிரியர்,<br>கக்சுயின் பல்கலைக்கழகம், ஜப்பான். |
| உரிமை | : | பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு 2017 |
| வெளியீடு | : | கோகுலம் - 1 |
| அச்சுப்பதிப்பு | : | கரிகணன் (தனியார்) நிறுவனம்<br>இல. 681, கே.கே.எஸ் வீதி,<br>யாழ்ப்பாணம். |

| | | |
|---|---|---|
| Title | : | Tamilar Panpaddil Markali Oru Maraputth Thinkal |
| Author | : | Prof. Manonmani Sanmugadas<br>Former Research Professor,<br>Gakushuin University, Japan. |
| Copy Right | : | Arunasalam Sanmugadas |
| Edition | : | First Edition 2017 |
| Publication | : | Kokulam - 1 |
| Printing | : | Harikanan (Pvt)Ltd.<br>No.681, K.K.S.Road, Jaffna. |
| Price | : | 200/= |
| ISBN | : | 978-955-43934-0-0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

வையகத்திலே வாழும் மக்கள் அனைவருமே மகிழ்வான வாழ்க்கையே வேண்டுமெனப் பல முயற்சிகளைச் செய்து வருகின்றனர். குறிப்பாக இந்த நூற்றாண்டிலே மக்களுடைய மனம் அமைதிக்காக அலைகிறது. துன்பங்களையும் இடர்களையும் கண்டு துவண்டு போய் நிற்கிறது. அத்தகைய மக்களை ஆற்றுப்படுத்த வேண்டிய காலமிது. குறிப்பாகத் தமிழர் வாழ்வியலில் ஏற்பட்ட பிற பண்பாட்டுத் தொடர்புகள் வாழ்வின் செல்நெறியையே மாற்றிவிட்டன. முதுமையும் இளமையும் இணையாமல் இரு கோடுகளாக நகருகின்றன.

இந்நிலையில் முதுமைதான் பொறுமையாக ஒரு வழிகாட்டலைச் செய்ய வேண்டும். தமிழருடைய கடந்த வரலாற்றுத் தடங்களை மீண்டும் திரும்பிப் பார்க்கும் போது இன்றைய தடம்புரண்ட நிலைகள் அவ்வப்போது தோன்றி மறைந்ததை நன்குணர முடிகிறது. நமது முன்னோர்கள் அப்போது 'வழிபாடு' என்னும் தோணியிலே ஏறி குழப்பமான கடலிலிருந்து கரை சேர்ந்தனர். பிறபண்பாடு, மொழி, சமயம் என்பவற்றால் தாக்குண்டு அல்லற்பட்ட போது இறைவழிபாடு அமைதியைக் கொடுத்தது. அது மக்களை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் ஆக்கியது. மனிதப் பிறவியின் நோக்கையும் செயற்பாட்டையும் கற்பித்தது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் இறையடியார்களும் தோன்றி மக்களை நெறிப்படுத்தினர்.

மனிதன் தன்னைச் சூழவுள்ள இயற்கையோடு இயைபுபட்டு மகிழ்வாக வாழ்வு நடத்த வழிபாடு நெறிப்படுத்தியது. அந்த இயற்கையை இறை உருவாகவும் ஆற்றலாகவும் கண்டு பணிந்து வாழும் மனப்பக்குவத்தை நல்கியது. அத்தகைய மனப்பக்குவத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றவர்கள் தமது பட்டறிவைப் பாடல்களிலே பதிவு செய்து வைத்துள்ளனர். சிறப்பாகத் தமிழ்மொழியிலே பாடப்பட்ட பாடல்கள் இன்றுவரை நிலைத்துள்ளன. காரைக்காலம்மையார் தொடக்கி வைத்த இப்பாடல் மரபு பக்திப்பாடல் மரபாகப் பின்வந்த சமயங்களாலும் பேணப்பட்டுள்ளது. சமணம், பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற சமயங்களும் தத்தம் சமயக் கருத்துகளைத் தமிழரிடையே பரப்பத் தமிழ்மொழியிலே பக்தி இலக்கியங்களை ஆக்கினர். சீவகசிந்தாமணி, மணிமேகலை, சீறாப்புராணம், தேம்பாவணி என்னும் நூல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை.

இயற்கையை வழிபடும் மரபைத் தொடக்கி வைத்த காரைக்காலம்மையார் என்னும் பெண்மணியே முதலில் இறையுருவை இயற்கையிலே காண்பதற்கு வழிகாட்டியவர். அவருடைய பாடல் இதற்குச் சான்றாக உள்ளது. அப்பாடல் வருமாறு அமைந்துள்ளது.

"காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்
வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்
தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை மற்றவற்கு
வீங்கிருளே போலும் மிடறு" (அற்புதத் திருவந்தாதி : 65)

காலங்களின் மாற்றமான தோற்றங்களிலே இறைவனைக் காண அம்மையார் வழிகாட்டியுள்ளார்.

அம்மையாருக்குப் பின் வந்த ஆண்டாளும் மணிவாசகரும் இயற்கையையும் காலத்தையும் இணைத்துப் புதியதொரு வழிபாட்டு மரபை வகுத்துச் சென்றுள்ளனர். விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பால் காலம் கடிகாரத்திலும் நாட்காட்டிகளிலும் வகுக்கப்பட்டது. ஆண்டாள் இப் புதிய செயற்பாடு தோன்றுவதற்கு முன்னரேயே காலத்தை வகுத்து வழிபாட்டு மரபாகப் பதிவு செய்துள்ளாள். ஆண்டாளின் புதியமரபை மணிவாசகரும் பின்பற்றி உள்ளார். இச்சிறுநூல் அக்காலமும் வழிபாடும் இயைந்து வழிகாட்டும் மரபையே விளக்கமுற்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மார்கழித் திங்கள்' என ஆண்டாள் பெயரிட்ட திங்கள், வழிபாட்டுக் குரிய திங்களாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. காலக்கணிப்பில் ஒரு திங்கள் (மாதம்) எவ்வாறு கணக்கிடப்படவேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தியவள் ஆண்டாளே. மனித உடலமைப்பில் பெண் ணின் உடலமைப்பிலும் ஒரு திங்களின் காலவரை இயற்கையின் கொடையாக அமைந்துள்ளது. அத் திங்களின் காலவரையறை 'மாத விடாய்' என இழிவுபடுத்தப்பட்டுள்ளது. ஆனால் கருவை வயிற்றில் பெண் சுமக்கும் போது 'பத்துத்திங்கள்' எனக் குழந்தையின் வளர்ச்சிக் காலத்தைத் தெளிவாகப் புலப்படுத்தி நிற்கிறது. இத்தகைய உடற்கூற்று எண்ணங்களுக்கு அப்பால் ஆண்டாள் காட்டிய காலவரையறை எல்லோரும் பின்பற்றக்கூடியது. நாட்டுக்கு வளம் தரும் இயற்கையின் கொடையான மழையை வேண்டிக் கூட்டாக வழிபாடு செய்யும் மரபு எக்காலத்திற்கும் எந்நாட்டவர்க்கும் பொருந்தக்கூடியது. வையகப் பொதுமை பற்றிய கருத்து மேலைநாட்டில் சென்ற நூற்றாண்டில் உருவாகி நவீன தொழில்நுட்பத்தின் வழியால் அதை ஏற்படுத்தும் முயற்சிகள் இன்று தொடர்கின்றன. ஆண்டாள் இயற்கையின் கொடைகளால் வையகத்தவர் மகிழ்வாக வாழ வழி காட்டியுள்ளாள்.

திருப்பாவையும் திருவெம்பாவையும் இரு இயற்கைத் தோற்றங் களின் பேராற்றல்களை விளக்கும் குறியீட்டு மரபுகளாகவும் உள்ளன. திருப்பாவை கடலின் ஆற்றலையும் திருவெம்பாவை மலையின் ஆற்றலையும் நுட்பமாகப் புலப்படுத்துகின்றன. பாற்கடலிலே பள்ளி கொள்ளும் பரந்தாமனும் திருவண்ணாமலையிலே உறையும் சிவனும் வழிபடு தெய்வங்களாகச் சிறப்புடன் பாடப்பட்டுள்ளன. ஆண்டாளின் காலக்கணிப்பில் மழைபெய்யும் மார்கழித் திங்கள் ஒரு வழிபாட்டு மரபின் தொடக்கத் திங்களாக விளங்குகிறது.

தமிழர் பண்பாடு பற்றிய மீள்பார்வையும் தேடல்களும் இன்று மிகவும் வேண்டப்படுகின்றன. சிறப்பாக தமிழரது இளைய தலைமுறை பல்வேறு பண்பாட்டுச் செல்வாக்கினால் குழப்பம் அடைந்துள்ளது. பொறிமுறைக் கையாட்சியால் கவரப்பட்டு இயற்கையைப் புறந்தள்ளி விடலாம் என எண்ணிச் செயற்படுகிறது. ஆனால் இயற்கையின் சீற்றம் வெளிப்படும் வேளைகளில் திகைத்து நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமழை, புயல், ஆழிப்பேரலை, எரிமலையின் சீற்றம், காட்டுத்தீ, நில அதிர்வு என இயற்கையின் சீற்றம் பலவழிகளில் வெளிப்படும் போது அவற்றுக்கு முகம் கொடுக்க முடியாமல் தளர்ந்து நிற்கிறது. அவற்றிலிருந்து தப்புவதற்குப் பல்வேறு முயற்சிகளை விஞ்ஞான அறிவு கொண்டு மேற்கொள்கிறது. இதனால் இளைய தலைமுறையின் எண்ணமும் செயற்பாடும் குழம்பியுள்ளன. அவற்றைச் சீர்செய்ய ஏற்றவழி வழிபாட்டுப் பயிற்சியேயாகும். உடல் தூய்மை, கூட்டாக முயலும் தன்மை, இசை, தொண்டு என்பன இப்பயிற்சிக்கு மிகவும் இன்றியமையாதவை. எனவே இப்பயிற்சிகளுக்கு ஆண்டாளும் மணிவாசகரும் காட்டிய மார்கழித்திங்களின் மரபான வழிபாடு பெரிதும் துணை செய்யும்.

இக்கருத்தை விளக்கும் நோக்கமாகவே இச்சிறு நூல் ஆக்கம் பெற்றுள்ளது. வையகமெங்கும் பரந்து வாழும் எமது தமிழர் தலைமுறைகள் இவ்வழிபாட்டின் பயனை நன்கு உணரவேண்டும் என்பதே என் எண்ணமாகும். இயற்கையோடு இயைந்த இனிய வாழ்வை எல்லோரும் பெறவேண்டும்.

வழக்கம் போல இந்த நூலும் எனது கணவர் பேராசிரியர் அ. சண்முகதாசின் 77 ஆம் அகவைப் பரிசாகக் கையளிக்கப்படுகிறது. நூலாக்கத்தில் எனக்கு ஒத்துழைப்புத் தந்த காலத்திற்கும் சூழலுக்கும் நன்றி. கனடா நாட்டில் கிடைத்த ஓய்வைப் பயன்படுத்தி நூலாக்கம் செய்யத் துணை நின்ற இறையருளை வியந்து வழிபடுகிறேன். நூலை அழகுற அச்சிட்டு உதவிய கரிகணன் (தனியார்) நிறுவனத்தினர் அனைவருக்கும் உரிமையாளரான திரு.சி. ராஜ்குமார் அவர்களுக்கும் நன்றி கூறுவதில் மனநிறைவு எய்துகிறேன்.

**முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே......

| | | |
|---|---|---|
| 01. | தமிழர் பண்பாட்டில் ஓர் மரபுத் திங்கள் | 01 |
| 02. | திருப்பாவையும் திருவெம்பாவையும் | 05 |
| 03. | பாடற்பொருள் | 06 |
| 04. | பாடல்களின் கட்டமைப்பு - திருப்பாவை | 07 |
| 05. | மார்கழித் திங்களின் வரையறை | 07 |
| 06. | நோன்பு நடைமுறைகள் | 08 |
| 07. | நோன்பின் பயன் | 10 |
| 08. | வழிபடும் முறைமை | 11 |
| 09. | துயில் எழுப்பல் | 12 |
| 10. | அருள் வேண்டல் | 19 |
| 11. | வழிபாட்டுறுதி செய்தல் | 21 |
| 12. | பாடல்களின் கட்டமைப்பு - திருவெண்பாவை | 24 |
| 13. | துயிலெழுப்பல் | 24 |
| 14. | வழிபாட்டு நோக்கம் | 28 |
| 15. | வழிபாடு உசாவல் | 29 |
| 16. | நீராடுதல் | 30 |
| 17. | மழை வேண்டல் | 35 |
| 18. | வழிபாட்டுறுதி கூறல் | 37 |
| 19. | வழிபாட்டு மரவு | 38 |
| 20. | இருபாவைப் பாடல்களினதும் ஒருமைப்பாடு | 41 |
| 21. | பாடல்களின் வேறுபட்ட நிலை | 46 |
| 22. | புதியதொரு பக்தி மரபு | 48 |
| 23. | பாவை வழிபாட்டைத் தொடர்தல் | 57 |
| 24. | வீட்டு நிலை வழிபாடு | 57 |
| 25. | திருக்கோயில் நிலை | 59 |
| 26. | தமிழர் புலம்பெயர் நாடுகளில் மார்கழித் திங்கள் | 62 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் பண்பாட்டில் ஒரு மரபுத்திங்கள்

மனிதன் காலத்தின் கடப்பை இயற்கையின் மாறுபடும் தோற்றங்களைக் கொண்டே முதலில் கணித்து வந்தான். ஒரு நாளின் நகர்வை பகலவன் வருகையையும் மறைவையும் கொண்டு அறிந்தான். ஓர் ஆண்டுக் கால அளவை பருவகாலத்தின் மாற்றங்களைக் கண்டு கணிப்பிட்டான். கூர்மையாகப் பொழுது நகர்வதைக் கணிப்பிட மலர்களைத் துணையாகக் கொண்டான். மனிதனுடைய இக்கணிப்பீடு தமிழரது மரபான கணிப்பீடு எனப் பண்டைத்தமிழ் இலக்கியப்பாடல்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளது. சிறப்பாகக் காதற்பாடல்களில் காலக்கணிப்பீடு துல்லியமாகவே விளக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கண நூல் இவ்விளக்கத்தை மேலும் வகுத்துக்காட்டியுள்ளது. தொல்காப்பியம் வகுத்துள்ளவற்றை வருமாறு காணலாம்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியலில் நிலங்கள் நான்காக வகுக்கப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பொழுதும் கூறப்பட்டுள்ளது. பின்வரும் நூற்பாக்கள் அதற்குச் சான்றாக உள.

"காரும் மாலையும் முல்லை" (தொல். பொருள். அகத். 6)

"குறிஞ்சி கூதிர் யாமம் என்மனார் புலவர்" (தொல். பொருள். அகத். 7)

"வைகறை விடியல் மருதம்" (தொல். பொருள். அகத். 9)

எற்பாடு நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும்" (தொல். பொருள். அகத். 10)

இங்கு கார், கூதிர் என்னும் பருவகாலங்களும் மாலை, யாமம், வைகறை, விடியல், எற்பாடு பொழுதுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் பின்வந்த தமிழ் நிகண்டான திவாகரம் ஆறு பருவ காலங்களை வருமாறு குறிப்பிட்டுள்ளது. கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என அவை பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றிற்குரிய கால அளவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்வரும் அட்டவணையில் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | பருவகாலங்களின் பெயர் | கால அளவு மாதங்கள் |
|---|---|---|
| 1. | கார்காலம் | ஆவணி, புரட்டாதி |
| 2. | கூதிர்காலம் | ஐப்பசி, கார்த்திகை |
| 3. | முன்பனி | மார்கழி, தை |
| 4. | பின்பனி | மாசி, பங்குனி |
| 5. | இளவேனில் | சித்திரை, வைகாசி |
| 6. | முதுவேனில் | ஆனி, ஆடி |

இக்கணிப்பீட்டில் ஓர் ஆண்டில் பன்னிரண்டு மாதங்கள் அடக்கப் பட்டுள்ளன. அவைபற்றிய பிற்காலத்திய கணிப்பீடுகளும் உள்ளன.

பண்டைத்தமிழ் இலக்கியங்களில் நாள், திங்கள் என்ற இரு சொற்களும் ஒரு காலக்கணிப்பீட்டை உணர்த்தும் சொற்களாக உள்ளன. ஒரு பகற்பொழுதும் ஓர் இரவுப் பொழுதும் இணைந்த காலப்பகுதி ஒரு நாள் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் ஒரு திங்கள் எவ்வளவு நாட்களை அடக்கிய காலப்பகுதியென்பது பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. இன்னும் 'திங்கள் என்ற சொல் நிலவைக் குறித்த சொல்லாகவும் உள்ளது. ஒரு நாளின் கடப்பை மதுரைக்காஞ்சி பின்வருமாறு பதிவு செய்யப்பட்டது.

"பகல் செய்யும் செஞ் ஞாயிறும்
இரவுச் செய்யும் வெண் திங்களும்"

(மதுரைக்காஞ்சி : 7-8)

பகற்பொழுது ஞாயிற்றால் அளவிடப்பட்டது. இரவுப் பொழுது வெண்மையான திங்களால் அளவிடப்பட்டது. இந்தப் பகலும் இரவும் இணைந்த நாளின் கடப்பைப் பெண்கள் சுவரிலே கோடிட்டுக் கணக்கிட்ட ஒரு மரபு இருந்துள்ளது. அதை அகநானூறு வருமாறு குறிப்பிடுகிறது.

"நாள் இழை நெடுஞ்சுவர் நோக்கி நோய் உழந்து
ஆழல் வாழிதோழி"

(அகநானூறு : 61)

"செய்குறி ஆழி வைகல் தோறு எண்ணி
எழுது சுவர் நினைந்து அழுவார் மழைக்கண்"

(அகநானூறு : 351)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரு குறிப்புக்களும் பிரிந்து சென்றவருடைய வரவை எதிர்பார்த்திருக்கும் பெண்களின் நாட் கணிப்பு முறையினை விளக்கிக் காட்டுகின்றன. தமது வீட்டுச் சுவரிலே ஒவ்வொரு நாளும் கடக்கும் போது அதை ஒரு குறியிட்டால் எழுதி வைத்துக்காத்திருக்கின்றனர். இந்நடைமுறையில் நாட் கணிப்பு மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 'திங்கள்' என்ற சொல் ஒரு குறிப்பிட்ட நாட்களை உள்ளடக்கியதாகக் கருதப்பட்டுள்ளது. 'தைத்திங்கள்' 'தைநீராடல்' என்னும் இரு தொடர்களும் 'தைத்திங்கள்' ஒரு குறிப்பிட்ட தொகையான நாட்களை உள்ளடக்கியது என்பதை உணர்த்துகின்றன. இத்துடன் பெரும்பாணாற்றுப் படையில் வரும் ஒரு குறிப்பு பெண்களின் செயற்பாடு கொண்டு நாளை விளக்கிக் காட்டுகிறது.

"நள் இருள் விடியல் புள் எழப்போகி
புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
ஆம்பி வால் முகையன்ன கூம்பு முகிழ்
உறை அமை தீம் தயிர் கலக்கி நுரை தெரிந்து
புகர் வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ
நாள் மோர் மாறும் நல்மாமேனி
சிறு குழை துயல்வரும் காதின் பணைத்தோள்
குறு நெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்"

(பெரும்பாணாற்றுப்படை : 155-162)

இருள் விலகாத விடியற்காலை நேரம் புட்களின் ஒலி கேட்டுக் கண் விழித்தாள். புலியின் உறுமல் ஒலிபோல மத்தினால் கடையும் ஒலிகேட்கிறது. ஆம்பல் மலரின் வெளிய மொட்டுப் போல உறைந்திருக்கும் இனிய தயிரைக் கடைகிறாள். கலக்கவரும் நுரை போன்ற வெண்ணெயை வேறாக்குகிறாள். புகைபடிந்தது போன்ற நிறமுடைய குழிந்த பானையிலே அந்த மோரை விட்டு தலையிலே அழகிய சும்மாட்டின் மேல் சுமந்து நாள்தோறும் விற்கிறாள். நல்ல அழகிய மேனியையுடைய சிறிய தொங்குகின்ற காதணிகளையுடையவள். மூங்கில் போல வழுவழுப்பான தோள்களையுடையவள். குறுகிய நெறிப்படுத்தப்பட்ட கூந்தலையுடைய ஆயமகள். அவளுடைய மோர் விற்கும் செயற்பாடு நாள்தோறும் நடைபெறுகிறது. ஒரு நாளின் கடப்பையும் நன்கு உணர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களின் வளர்ச்சி நிலைகண்டு நாள் கணிக்கப்பட்டதையும் பண்டைய இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. நிறையுறு மதி ஒரு சிறப்பான நாளாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மதியின் பிறைக்கோலம் அடையாளம் காணப்பட்டு வழிபடப்பட்டதைக் குறுந்தொகை வருமாறு பதிவு செய்துள்ளது.

"வளையுடைத் தனைய தாகிப் பலர்தொழச்
செவ்வானத் தையெனத் தோன்றி
இன்னம் பிறந்தன்று பிறையே அன்னோ
மறந்தனர் கொல்லோ ......."

(குறுந்தொகை : 307)

இப்பதிவில் கண்ணுக்கு முதலிலே தோன்றும் வளைந்த பிறையை வானத்திலே கண்டுபலரும் தொழும் வழக்கமிருந்ததை அறிய முடிகிறது. அதேவேளை அந்தப் பிறையை ஒரு காலக்கணிப்பாகப் பெண் கொண்டிருந்த நிலையும் விளக்கப்பட்டுள்ளது. அவளைப் பிரிந்து சென்ற காதலன் திரும்பிவரும் காலத்தைப் பிறையைக் கண்டும் மறந்து விட்டானோ என நினைக்கிறாள். பெண் ஒரு குறிப்பிட்ட காலத்தை அவனிடம் கூறியிருந்தாள். அவன் அதைக் கருத்திற் கொள்ளவில்லை. இன்றும் தமிழரிடையே மூன்றாம் பிறையை வழிபடும் மரபு பேணப்படுகிறது. அதனால் இப்பிறையைப் புதுப்பிறை எனவும் அழைப்பர். 'புதுப்பிறை' என்னும் தொடர் புறநானூற்றுப்பாடலி (378) ல் பதிவாகியுள்ளது. பிறைகொண்டு நாட்களைக் கணக்கிடும் முறை இருந்ததை பொருநராற்றுப் படையும் புறநானூறும் வருமாறு குறிப்பிட்டுள்ளன.

"துளைவாய் தூர்ந்த துரப்பு அமை ஆணி
எண் நாள் திங்கள் வடிவிற்று ஆகி......"

(பொருநராற்றுப்படை : 10-11)

"எண் நாள் திங்கள் அனைய கொடுங்கரைத்
தெண்ணீர்ச் சிறுகுளம்......"

(புறநானூறு : 118)

பிறையினுடைய வளர்ச்சி நிலையில் எட்டாம் நாள் ஒரு குறிப்பிடக்கூடிய நாளாக இருந்துள்ளது. மேற்காட்டிய குறிப்புகளில் எட்டாம் நாள் திங்களின் தோற்றம் உவமையாகப் பயன்படுத் தப்பட்டுள்ளது. மூன்றாம் நாள் பிறையை எல்லோரும் தெளிவாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணலாம். எட்டாம் நாள் பிறை பாதிநிறை மதியாக இருக்கும். பதினைந்தாம் நாள் முழுநிலவாகிவிடும். பின்னர் அதன் தோற்றம் தேய்வடைந்து எட்டாம் நாள் அரைநிலவாகிவிடும் தொடர்ந்து பதினைந்தாம் நாள் முற்றாக மறைந்துவிடும். இதனால் தேய்பிறை, வளர்பிறை என்ற இருவகை நிலைகளையும் கொண்டு கணிப்பிடும் முறை இருந்துள்ளது. எனவே ஒரு திங்கள் முப்பது நாட்களை உள்ளடக்கிய காலமாகக் கொள்ளப்பட்டதை நன்குணர முடிகின்றது. இக்கணிப்பீட்டையே ஆண்டாள் பாடலான திருப்பாவையும் உணர்த்துகிறது. மார்கழித்திங்களில் வழிபாடு செய்யும் மரபை முப்பது பாடல்களிலே பாடி ஒரு கணிப்பீட்டை விளக்கியுள்ளாள்.

**திருப்பாவையும் திருவெம்பாவையும்**

தமிழிலே தோன்றிய பக்தி இலக்கியங்களில் இரு பாடல்கள் தனித்துவமானவை. ஆண்டாள் பாடிய திருப்பாவையும் மணிவாசகர் பாடிய திருவெம்பாவையும் இத்தகைய தனிச்சிறப்புப் பெற்ற பாடல்களாகும். இன்றுவரை இவ்விரு பாடல்களும் வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதனால் இவைபற்றி விளக்கமாக அறிவது பயன்தரும். இரு பாடல்களிலும் குறிப்பிடத்த ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் விரிவாக நோக்கலாம்.

**பாடல்கள் :**

ஆண்டாள் பாடிய பாடல்கள் 30. மணிவாசகர் பாடிய பாடல்கள் 20. பாடல் தொகுப்புகள் பெற்றிருக்கும் பெயரும் வேறுபட்டவையாகும். ஆண்டாளின் பாடல் திருப்பாவை என்றும் மணிவாசகர் பாடல் திருவெம்பாவை என்றும் பெயர் பெற்றுள்ளன. ஆண்டாளுடைய பாடல் திரு என்னும் அடையுடன் பாவை என்ற சொல் இணைந்து திருப்பாவை என அமைந்துள்ளது. மணிவாசகர் பாடல் திரு என்னும் அடையுடன் எம் என்ற சொல் நடுவிலே சேர்ந்து பாவை என்ற சொல் இணைந்து திருவெம்பாவை என அமைந்துள்ளது. இரு பாடல்களும் பாவைப்பாட்டு என்றே சிறப்பாக அழைக்கப்பட்டன. பாடல்கள் எட்டடி நாற்சீர் கொச்சகக் கலிப்பா என்னும் செய்யுளமைப்பில் பாடப்பட்டுள்ளன.

இருவருடைய பாடல்களின் இறுதியில் சிறப்பாக 'ஏல் ஓர் எம்பாவாய்' என்ற தொடர் அமைந்துள்ளது. இதில் 'ஏல்ஓர்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது வெறும் அசைச் சொல் என்று கருதுவாரும் உளர். ஆனால் பாடல்களில் இவை ஒரு ஆழமான பொருளை உணர்த்தி நிற்பவை. ஏல் என்பது ஏற்பது. ஓர் என்பது ஆய்வு செய்வது. 'ஏலோர்' என்பது 'கருத்தைக் கேட்டு நீ ஆய்வு செய்து முடிவை எடு' என்பதாகும். மேலும் பாடல்கள் பெண் கூற்றாகத் தோழியர் உரையாடலாக அமைக்கப்பட்டுள்ளன. 'எம்பாவாய்' என்ற விளிச்சொல் இதற்குச் சான்றாக உள்ளது. திருவெம்பாவைப் பாடல்கள் சக்தியை வியந்து பாடிய பாடல்கள் எனக் கூறப்படுகின்றன. 'பாவை' என்ற சொல் பாடலில் தெய்வப்பதுமையைக் குறிப்பது எனப்படுகிறது. உமையம் மையைப் பாவை வடிவிலே கண்டு அம்மையின் பண்புகளை வியந்து போற்றும் பாடல் என்றும் விளக்கப்பட்டுள்ளது. மணிவாசகர் பாடல்கள் பெண்ணாகப் பாவனை செய்து பாடப்பட்டவை. ஆண்டாள் பாடல்கள் பெண்மொழியில் பெண்மையுணர்வோடு பாடப்பட்ட பாடல்களாகும்.

**பாடற் பொருள்**

இருவருடைய பாடல்களும் இறைவன் புகழ்பாடல் என்பதையே பொருளாகக் கொண்டுள்ளன. திருப்பாவை திருமால் புகழ்பாடுவது. திருவெம்பாவை சிவன் புகழைப் பாடுவது. இறைவன் புகழைப்பாட இருவருமே ஒரு பொதுவான வாழ்வியல் நடைமுறையைத் தளமாகக் கொண்டுள்ளனர். 'மார்கழி நீராடல்' என்னும் ஒரு பெண்களின் வாழ்வியல் நடைமுறையூடாகப் பக்தி நெறி ஒன்றை இருவரும் புலப்படுத்தியுள்ளனர். இந் நடைமுறை பண்டைய தமிழ், இலக்கியங்களில் குறிப்பிடப்படவில்லை. ஆனால் பண்டைத் தமிழ் இலக்கியத் தொகுப்பான பரிபாடலில் உள்ள வையை பற்றிய பாடலில் வரும் குறிப்புகள் 'தைநீராடல்' பற்றிக் கூறுகின்றன.

"தாய் அருகா நின்று தவத் தைந் நீராடுதல்
நீ உரைத்தி வையை நதி"

(பரிபாடல் : 11: 91 - 92)

"இன்ன பண்பின் நின் தைந் நீராடல்
மின் இழை நறு நுதல் மகள் மேம்பட்ட
கன்னிமை கனியாக் கைக்கிளைக் காம
இன் இயல் மாண் தேர்ச்சி இசை பரிபாடல்
முன்முறை செய் தவத்தின் இம் முறை இயைந்தோம்"

(பரிபாடல் : 11: 134 - 138)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்குறிப்புகள் வழிபாட்டு நிலையில் தை நீராடல் நடைமுறை செயற்படுத்தப்பட்டதை உணர்த்துகின்றன. ஆனால் 'மார்கழி நீராடல்' என்னும் நடைமுறை பற்றிய குறிப்பை முதலில் ஆண்டாள் பாடலில் தான் காணமுடிகிறது. அதை அடுத்து மணிவாசகருடைய பாடலிலும் காணமுடிகிறது. இதனால் 'மார்கழி நீராடல்' என்னும் நடைமுறையை ஆண்டாளே முதலில் வழிபாட்டு நடைமுறையாக மாற்றிய பெருமைக்குரியவளாகிறாள். ஆண்டாளின் வழிபாட்டு நடைமுறையையே மணிவாசகரும் பின்பற்றிப் பாடல்களைப் பாடியுள்ளார். எனவே இருவரும் பெண்களை வழிபாட்டிலே ஈடுபடுத்த முயற்சி செய்ததை உணர முடிகிறது. எனினும் இந்த வழிபாட்டு நடைமுறையைப் பெண்களிடம் நிலை பெறச் செய்ததில் ஆண்டாளே முன்னோடியாவாள்.

**பாடல்களின் கட்டமைப்பு – திருப்பாவை**

திருப்பாவைப் பாடல்களின் கட்டமைப்பு பின்வரும் பொருள் நிலையில் அமைந்துள்ளது.

1. மார்கழித் திங்களின் வரையறை
2. நோன்பு நடைமுறைகள்
3. நோன்பின் பயன்
4. வழிபடும் முறைமை
5. துயில் எழுப்பல்
6. அருள் வேண்டல்
7. நோன்பு நிறைவேற்றல்
8. வழிபாட்டுறுதி கூறல்
9. முத்திரைக்கவி

இவற்றை ஆண்டாள் பாடல்களிலே விளக்கியும் தொகுத்தும் கூறிய முறைமை அவளுடைய புலமைத்திறனுக்குச் சான்றாகவுள்ளது.

**மார்கழித் திங்களின் வரையறை**

திருப்பாவை முதற்பாடல் மார்கழித்திங்களின் தொடக்கத்தை முதலில் பதிவு செய்துள்ளது. அது வருமாறு அமைந்துள்ளது.

"மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர் மல்கும் ஆயர்பாடிச் செல்வச் சிறுமீர்காள்"

(திருப்பாவை : 1: 1 - 3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழித்திங்கள் மதியின் தோற்றம், வளர்ச்சி, நிறைவு கொண்டு வரையறை செய்யப்பட்டிருந்ததை ஆண்டாள் தனது பாடலிலே நுட்பமாக விளக்கியுள்ளாள். அத்திங்கள் நிறைமதி நாளன்று தொடங்குகிறது. அடுத்து நிறைமதி நாளிலே தைத்திங்கள் தொடங்குகிறது. ஆண்டாள் பாடிய நாச்சியார் திருமொழியில் வரும் முதற்பாடல் இதனைப் பதிவு செய்துள்ளது.

"தையொரு திங்களும் தரை விளக்கித்
தண்மண்டல மிட்டு மாசி முன்னாள்
ஐயநுண் மணற் கொண்டு தெருவணிந்து
அழகினுக் கலங்கரித் தனங்கதேவா
உய்யவு மாங்கொலோ என்று சொல்லி
உன்னையும் உம்பியையும் தொழுதேன்
வெய்யதோர் தழலுமிழ் சக்கரக்கை
வேங்கட வற் கென்னை விதிக்கிற்றியே"
(நாச்சியார் திருமொழி : 1)

மார்கழி மாதத்தைத் தொடர்ந்து தை, மாசி மாதங்களின் வழிபாட்டு நடைமுறையும் காரணமும் இப்பாடலில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. தைத்திங்கள் முழுநாட்களும் வீட்டு முன்றிலைத் தூய்மை செய்து நீர்தெளித்து அழகிய கோலமிடும் முறைமை ஆண்டாள் காலத்திலே இருந்துள்ளது. மாசித்திங்கள் முதல்நாள் அழகிய வெண்மணல் கொண்டு தெருவை அலங்கரிக்கும் வழக்கமிருந்துள்ளது. ஆனால் இத்திங்கள் எவ்வளவு நாட்களைக் கொண்டது என்பது பற்றிய பதிவு எதுவுமில்லை. ஆனால் நிறைமதி தொடங்கி அடுத்த நிறைமதி வரையான 30 நாட்களை உள்ளடக்கியதே ஒரு திங்களென்பது விளக்கமாகவே உள்ளது. 30 நாட்களை உள்ளடக்கிய காலப்பகுதிக்குத் 'திங்கள்' எனப் பெயர் வழங்குவதும் இதனை உறுதிசெய்கிறது. மேலும் ஆண்டாள் திருப்பாவைப் பாடல்களை 30 ஆக அமைத்திருப்பதும் இக் கருத்தினை அணி செய்வதாக உள்ளது.

**நோன்பு நடைமுறைகள்**

ஆண்டாளின் திருப்பாவை இரண்டாவது பாடலில் மார்கழித் திங்களின் நோன்பு நடைமுறைகள் வையகத்தவருக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இந்நோன்பு பாவை நோன்பு என அழைக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. 'பாவை நோன்பு' என்ற தொடர் இரு பொருள் தருவது. ஒன்று பாவை என்னும் வழிபாடு தெய்வம் குறித்த நோன்பு என்பது. மற்றது பாவையர் நோற்கும் நோன்பு என்பதாகும். எனவே மார்கழி நோன்பு பெண்கள் மட்டும் செய்கின்ற ஒரு சிறப்பான வழிபடு எனவும் பொருள் தருகிறது. ஆனால் பாடலிலுள்ள 'பரமனடி பாடி' என்னும் தொடர் திருமாலை நினைந்து நோன்பிருத்தல் என்பதைத் தெளிவாகவே சுட்டி நிற்கிறது. மேலும் பாடல் வருமாறு நோன்பு நடைமுறைகளைத் தெளிவாகவே பதிவு செய்துள்ளது.

1. பரமன் அடி பாடல்
2. நெய்யுண்ணாதிருத்தல்
3. பாலுண்ணாதிருத்தல்
4. விடியற்காலையில் நீராடல்
5. கண்ணுக்கு மையெட்டு எழுதாதிருத்தல்
6. மலரிட்டுக் கூந்தல் முடியாதிருத்தல்
7. செய்யக்கூடாதவற்றைச் செய்யாதிருத்தல்
8. தீக்குறள் சொல்லாதிருத்தல்
9. ஐயமும் பிச்சையுமிடல்

நோன்பு என்பது தமிழர் வழிபாட்டு நடைமுறைகளில் நீண்ட காலமாக மரபாக உள்ளது. தாம் விரும்பியதைப் பெறுவதற்காக நோன்பிருப்பர். ஆண்டாள் பாடல் அதை விரிவாகவே பாடியுள்ளது. நாளாந்த வாழ்வியல் நடைமுறைகளை ஒதுக்கித் தூய்மையாக இறை வழிபாடு செய்வதே நோன்பாகும். இந்நடைமுறை பெண்களுக்கு நன்மை தருமென ஆண்டாள் பாடியிருப்பது இன்று வரையும் பின்பற்றப்படுகிறது. நெய் உண்ணாமை, பாலுண்ணாமை என்பன உணவுச்சுருக்கத்தைக் காட்டி நிற்கின்றன. மையெழுதாதிருப்பதும் மலர்சூடாதிருப்பதும் கோலப்புனைவுச்சுருக்கத்தை உணர்த்துகின்றன. தீயசெயல், தீய சொல் என்பனவும் விலக்கப்பட்டுள்ளன. அத்தோடு உணவுக்கொடை சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐயம், பிச்சை என இரண்டு செயற்பாடுகளை ஆண்டாள் குறிப்பிட்டுள்ளாள். ஐயம், பிச்சை என்ற இரு சொற்களையும் வருமாறு நீதி நூல்கள் குறிப்பிட்டுள்ளது.

ஐயம் இட்டு உண் (ஆத்திசூடி)

பிச்சை புகினும் கற்கை நன்றே (வெற்றி வேற்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோன்புக்குரிய கட்டுப்பாடுகளாக ஆண்டாள் கூறிய நடைமுறைகள் இன்றும் பின்பற்றப்படுகின்றன. உடலையும் உள்ளத்தையும் ஒரு நிலைப்படுத்த இவை உதவின.

**நோன்பின் பயன்**

திருப்பாவையில் மூன்றாவது பாடல் நோன்பின் பயனை எடுத்துரைக்கிறது.

"ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர் பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளற் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்"

திருமாலுடைய பெயரைப்பாடி நாம் நோன்பிருந்து நீராடி வழிபாடு செய்தால் ஏற்படும் மூன்று பயன்கள் பாடலிலே கூறப்பட்டுள்ளன.

1. நாடெல்லாம் தீங்கின்றி திங்கள் மும்மாரி பெய்யும்
2. செந்நெல் வளம் ஓங்கும்
3. குடம் நிறையப் பசுக்கள் பால்சொரியும்

ஒரு நாட்டின் வளத்திற்கு மழை இன்றியமையாதது. அதுவும் ஒரு தினங்களில் மூன்று முறை மழை பெய்தால் அது நீர் வளத்தைப் பெருக்கும். பழந்தமிழிலக்கியங்களில் கீழ்க்கணக்கு நூலான திரிகடுகம் மும்மாரி யார் யார் பொருட்டுப் பெய்யுமென வருமாறு பதிவு செய்துள்ளது.

"கொண்டான் குறிப்பறிவான் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் தவசி கொடி தொரீ இ
நல்லவை செய்வான் அரசன் இவர் மூவர்
பெய் எனப் பெய்யும் மழை"

(பாடல் : 96)

இப்பாடலில் நல்ல வாழ்க்கைத் துணைவியும் சிறந்த தவம் செய்யும் தவசியும், செங்கோன்மையுடைய அரசனும் பெய் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னால் மழை பெய்யும் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் ஆண்டாளோ மார்கழி நீராடல் செய்து எல்லோருமாகக் கூட்டாகச் சேர்ந்து பெண்கள் திருமாலை வழிபாடு செய்தால் மாதம் மும்மாரி பெய்யும் என நம்பிக்கையூட்டுகிறாள். மழை வளத்தால் வையகத்தில் எல்லோருமே நலம் பெறலாம். மக்கள் உணவான நெல் வளமும் பால் வளமும் பெருகும். மனிதனும் ஏனைய உயிரினங்களும் மகிழ்வோடு வாழ வழிபாடே சிறந்த செயற்பாடாகும்.

**வழிபடும் முறைமை**

திருமால் வழிபாடு எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை ஆண்டாள் தோழிமாருக்குக் கூறுவது போலப் பாடலிலே விளக்கியுள்ளாள்.

"தூயோமாய் வந்து நாம் தூமலர்தூ வித்தொழுது
வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய்"

(திருப்பாவை : 5)

நீராடி நம்மை அகமும் புறமும் தூய்மை செய்து திருமால் உறையும் திருக்கோயில் சென்று மலர்களைத் தூவி நாம் வழிபட வேண்டும். வாயினால் அவன் அருட் செயல்கள் பற்றிப் பாட வேண்டும். மனத்தினால் எப்போதும் வணங்க வேண்டும். அவ்வாறு நாம் வழிபட்டால் கடந்த காலத்திலே நாம் செய்த பிழைகளையும் நீக்கிவிடுவான். நிகழ்காலத்து நாம் செய்த பிழைகளையும் தீயிலகப்பட்ட தூசு போல நீக்கிவிடுவான். இதனை நாம் எல்லோருக்கும் எடுத்துரைத்து எல்லோரையும் வழிபாட்டு நெறியில் செல்ல வைக்க வேண்டும்.

இந்த வழிபாட்டு நெறிப்பயிற்றல் பற்றிய குறிப்பு மணிவாசகருடைய திருவெம்பாவையில் இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மார்கழி நீராடலும் பாவை நோன்பும் மகளிருடைய வழிபாட்டு நடைமுறைகளாக மணிவாசகர் காலத்திலும் இருந்துள்ளன. அதனால் சிவனருளைப் பாட மார்கழி நீராடல் நடைமுறையை அவரும் பயன்படுத்தியுள்ளார். ஆண்டாள் மார்கழி நீராடல் மகிழ்ச்சியோடு நடைபெற மழையைப் பொழிய வேண்டும் என மாலை வழிபடுகிறாள் அவளுடைய வேண்டுதல் வருமாறு அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆழி மழைக்கண்ணா ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி
ஊழி முதல்வன் போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழி போல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்
வாழ வுலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்"
(திருப்பாவை : 4)

*இயற்கையாக நாம் காணும் மழையின் பொழிவைத் திருமாலின் அருள் நிலையாக ஆண்டாள் காட்டுகிறாள். அவனுடைய பல்வேறு தோற்ற நிலைகளையும் குறிப்பிட்டுள்ளாள். மார்கழி நீராடல் செய்யும் போது மழை பொழிந்தால் அது திருமாலின் அருள்மழையென நினைந்து வழிபடச் சொல்கிறாள். இதே வழிபாட்டுநெறியை மணிவாசகரும் திருவெம்பாவையில் வருமாறு பாடியுள்ளார்.*

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பி திருப்புருவம்
என்னச் சிலை குலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்
(திருவெம்பாவை : 16)

*மணிவாசகரும் இயற்கையான மழைப் பொழிவிலே உமை அம்மையின் திருக்கோலத்தைக் காட்டுகிறார். இறையருள் மழையை இயற்கையின் மழைக்கோலத்திலே அமைத்துக் காட்டுவது மார்கழி நீராடலின் சிறப்பையும் பாவைப் பாட்டின் தனித்துவத்தையும் நன்கு உணர்த்தி நிற்கிறது.*

## துயில் எழுப்பல்

*திருப்பாவையில் 16 பாடல்கள் துயிலெழுப்பும் பாடல்களாக அமைந்துள்ளன. மார்கழி நீராடல் செய்வதற்காகப் பெண்களைத்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயிலெழுப்பும் நடைமுறை இருந்ததைப் பாடல்கள் தெளிவாக உணர்த்துகின்றன. மக்கள் துயிலிலிருந்து எழுவதற்கு இயற்கையான ஒலிகள் உண்டு. அவற்றைக் கேட்டு அனைவரும் துயில் எழுவர். ஆண்டாள் காலத்தில் கேட்ட இயற்கை ஒலியை இருபாடல்களிலே பதிவு செய்துள்ளாள். புட்கள் குரல் கொடுக்கின்றன. ஆனைச்சாத்தான் என்னும் பறவை கீசுகீசென்று ஒலியெழுப்புகிறது. அந்த ஒலிகளோடு புள்ளரயன் கோவிலில் ஒலிக்கும் வெண்சங்கின் பேரொலியும் கேட்கிறது. அத்துடன் முனிவர்களும் யோகிகளும் மெள்ள எழுந்து அரி அன்று கூறி வழிபடும் ஒலியும் கேட்கிறது. மார்கழித் திங்களின் விடியற்போதில் வீட்டிற்கு வெளியே கேட்கும் ஒலிகள் இவை.

இவற்றை விட வீட்டினுள்ளே விடியற்காலை வேளை கேட்கும் சிறப்பான ஒலியை ஆண்டாள் வருமாறு குறிப்பிட்டுள்ளாள்.

"காசுப் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ"

(திருப்பாவை : 7)

வீட்டிலே விடிகாலையில் வீட்டிலுள்ள குடும்பத்தலைவி மோர் கடைந்து கொண்டிருக்கிறாள். அவள் தன்கைகளால் மத்தைச் சுழற்றிக் கடையும் போது தயிர் ஏற்படுத்தும் கலகல என்ற அரவத்தோடு அவளுடைய அணிகலன்களும் கலகல என ஒலியெழுப்புகின்றன. அந்த ஒலிகள் வீட்டிலே துயில்கின்றவரை எழுப்பும் இனிய ஒலிகள் ஆனால் அந்த இனிய ஒலி கேளாமல் உறக்கம் கொள்பவரும் உளர். குறிப்பாக அந்த ஒலியைக் கேளாமல் பெண்கள் உறக்குவது தவறு என்பதையும் இங்கே ஆண்டாள் நுட்பமாகப் புலப்படுத்தியுள்ளாள்.

அடுத்துத் துயில் எழுப்பும் போது இயற்கைத் தோற்றத்தின் வெளிப்பாட்டையும் வேறு சில நடைமுறைகளையும் காட்சிப்படுத்திக் காட்டுகிறாள்.

"கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு
மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்து உன்னைக்
கூவுவான் வந்து நின்றோம் கோது கலமுடைய
பாவாய் எழுந்திராய் ..................."

(திருப்பாவை : 8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்குத் திக்கிலே வானம் வெளுத்துவிட்டது. எருமைகளெல்லாம் தமது குடில்களை விட்டு மேய்ச்சலுக்காக வெளியே செல்கின்றன. அவற்றின் கன்றுகளும் பின்னே செல்லத் தொடங்கின. அவற்றை அவ்வாறு பின்னே செல்ல விடாது பாதுகாத்து விட்டு உன்னை எழுப்புவதற்காக நாம் வந்து நின்றோம். பாவையே நீ எழுந்திரு! இவ்வாறு துயில் எழுப்ப வந்தபோது வேறு காட்சிகளை விளக்குவது ஆயர்பாடியின் நாளாந்த வாழ்வியலின் ஒரு பதிவாகவும் அமைந் துள்ளது.

துயிலெழுப்பலின் இரண்டாவது நிலையாக ஆண்டாள் அமைத்திருக்கும் பகுதி ஆயர்பாடியிலுள்ளோரைத் துயிலெழுப் புவதாக உள்ளது. முதலிலே மாமன் மகளை எழுப்புகிறாள். அக்காட்சி வருமாறு:

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமன் மகளே மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர் அவளை யெழுப்பீரோ உன்மகள் தான்
ஊமையோ அன்றி செவிடோ அனந்தலோ
ஏமப் பெருந்துயில் மந்திரப்பட்டாளோ?

(திருப்பாவை : 9)

இங்கு ஆயர் குடியிருப்பு நிலை நுட்பமாகப்பதிவு செய்யப் பட்டுள்ளது. தூய மணிமாடம். சுற்றிலும் விளக்கெரிகிறது. தூபம் கமழ்ந்து கொண்டிருக்கிறது. அங்கு ஒரு பெண் துயிலணை மீது துயின்று கொண்டிருக்கிறாள். அவள் துயில் கலையாமல் பஞ்சணையில் ஊமைபோல, செவிடுபோலத் துயில்கிறாள் எனவே அங்கேயுள்ள மாமிமாரிடம் அவளை எழுப்பும் கேட்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்தப் பெண்ணின் துயில் நிலையைக் கும்பகருணனோடு ஒப்பிட்டு ஆண்டாள் அடுத்த பாடலை அமைத்துள்ளாள். தோழிமார் வீட்டு முற்றத்திலே நின்று முகில் வண்ணனுடைய பெயரைப் பாடிய போதும் அவள் துயிலெழவில்லை. பாற்பசுக்கள் நிறைய உள்ள வளம் மிகுந்த வீட்டில் வாழும் பெண் அவள். எழுப்ப வந்த பெண்களோ பனிதலையிலே வீழ வெளியே காத்திருக்கிறார்கள். அவளை எழுப்புவதற்கு மீண்டும் ஒரு விடிகாலைக் காட்சியை எடுத்துக் கூறுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிள்ளைகள் எல்லோரும் பாவைக்களம் புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்
குள்ளக் குளிரக் குடைந்நீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ பாவாய் நீ நன்னாளால்"

(திருப்பாவை : 13)

நீராடுவதற்காகப் பிள்ளைகள் எல்லோரும் பாவைக்களம் சென்று விட்டார்கள். கதிரவனுக்கு முன்னே தோன்றும் விடிவெள்ளி எழுந்துவிட்டது. வியாழன் உறங்கி விட்டது. புட்கள் எல்லாம் ஒலி எழுப்புகின்றன. மலர்போன்ற அழகிய கண்ணையுடையவளே. குளிர்ந்த நீரிலே குடைந்து நீராடாமல் நீ துயில்கின்றாயே. பாவை போன்றவளே இந்த நல்ல நாளிலே நீ இப்படிக்கிடக்கலாமோ? இன்னும் உங்கள் வீட்டின் பின்புறமுள்ள வாவியிலே செங்கழு நீர் மலர்ந்து விட்டது. ஆம்பல் மலர் கூம்பி விட்டது. செங்கற் பொடி நிறத்திலே ஆடை அணிந்த தவமுடையோர் தங்களுடைய திருக்கோயில்களில் சங்கை ஒலிப்பதற்காகச் சென்று கொண்டிருக்கிறார்கள் எங்களை வந்து 'நான் முன்னே எழுப்புவேன் என்று சொன்ன நீயே இப்போது வெட்கமில்லாமல் உறங்கிக் கொண்டு இருக்கிறாயே?'

இங்கு ஆண்டாள் பொழுது பற்றிய ஒரு செய்தியைக் குறிப்பிட்டுள்ளாள். காலையில் மலர்வது செங்கழுநீர் மலர். மாலையில் மலர்வது ஆம்பல் மலர். இந்த இரண்டு காலத்தை அறிவுறுத்துபவை. அதனால் அவற்றிற்குப் 'போது' என்ற சிறப்புப் பெயரும் வழங்கப்பட்டிருந்தது. பண்டைக்காலத்தில் காலத்தைக் காட்டப் பொறிகள் இருக்கவில்லை. இயற்கைத் தோற்ற மாறுபாடுகளால் காலம் உணரப்பட்டது. பெண்கள் துயிலெழுவதற்கு இயற்கையே உதவியது. துயிலும் மாமன் மகள் இப்போது கண்விழித்து விட்டாள். ஆனால் இன்னமும் படுக்கையை விட்டு இறங்கவில்லை. கிடந்தவாறே அவள் உரையாடும் காட்சியை ஆண்டாள் நாடகப் பூர்வமாக வருமாறு சொல்லே வியமாகப்பாடியுள்ளாள்.

"எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ? போந்தார் போந்தெண்ணிக் கொள்
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனை பாடே லோரெம்பாவாய்"

(திருப்பாவை : 15)

இப்பாடலில் இளம் பெண்களின் துடுக்கான மொழிநடையையே ஆண்டாள் சிறப்பாகப் பதிவு செய்துள்ளாள். துயிலெழுப்பச் சென்ற பெண்கள் ஒரு கேள்வி கேட்டார்கள். 'எல்லே இளங்கிளியே இன்னம் உறங்குதியோ? இந்தக் கேள்விக்குத் துடுக்காக ஒரு மறுமொழி இளம் பெண்ணிடமிருந்து உடனே வருகிறது. 'சில்லென்றழையேன் மின் நங்கைமீர் போதர்கின்றேன்.' இங்கு ஒரு பெண்ணைப் பல பெண்கள் கேலி செய்யும் போது ஏற்படும் சினம் அவள் குரலில் வெளிவருகிறது பெண்கள் மேலும் அவளைக் கிண்டல் செய்கிறார்கள். 'வல்லே உன் கட்டுரைகள் பண்டே யுன் வாயறிதும்' என்று அவளுடைய பேச்சு வன்மையைக் குறிப்பிடுகிறார்கள். கேட்ட இளம் பெண் விரைவாகப் பேசுகிறாள். 'வல்லீர்கள் நீங்களே' நீங்கள் விரைந்து செல்லுங்கள். எல்லோரும் வந்து விட்டார்களோ? என்று மேலும் கேள்விகள் கேட்கிறாள். அதற்கு மறுமொழி எழுப்புகின்ற பெண்களிடமிருந்து சற்றுச் சினத்துடன் வெளிவருகிறது. 'போந்தார்' போந்தெண்ணிக்கொள்' மாயவனைப் பாடி வழிபடச் செல்லும் போது துயிலாத பெண்மீது ஏனைய துயில்நீங்கி எழுந்து நீராடச் செல்லும் பெண்களுக்குப் பெருஞ்சினமேற்படுகிறது. ஆண்டாளின் இந்தப் பாடல் வழிபாட்டு நடைமுறைகளை உரியகாலத்திலே இளையவர் செய்யவேண்டுமென்ற அறிவுரையைக் கூறுவதாகவும் அமைந்துள்ளது. உறக்கத்தைத் தொடர விரும்பும் இளையோர் இயல்பு பாடலிலே தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. திருப்பாவைப் பாடல்களில் இப்பாடல் தனிச்சிறப்புடையது. துயில் வயப்பட்டு நிற்போரையும் அவர்களை எழுப்புவோரது முயற்சிகளையும் எடுத்துக் கூறுவதன்மூலம் வையகத்தவரேயே வழிபாட்டில் இணைக்கிறாள்.

அடுத்து ஆண்டாளும் தோழிமாரும் நந்தகோபன் மாளிகைக்குச் செல்கிறார்கள். தமிழில் ஆண்டாள் பாடலில் இப்பகுதியும் சிறப்பானது. ஆயர்பாடியிலே வாழும் இளம் பெண்கள் கண்ணனை வழிபட்டு அவனுடைய மெய்யடிமை நிலையைப் பெற விரும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள். இதனைத் திருப்பாவை முதல் பாட்டிலேயே ஆண்டாள் குறிப்பிட்டுள்ளாள். மார்கழி நீராடி நோன்பிருந்தால் அந்த அரிய பேற்றை அடைய முடியும். அதை வருமாறு பதிவுசெய்துள்ளாள்.

"கூர்வேற் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ் சிங்கம்
கார்மேனிச் செங்கணண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே நமக்கே பறைதருவான்"

(திருப்பாவை : 1)

இங்கு நந்தகோபனும் யசோதையும் கண்ணனின் வளர்ப்புப் பெற்றோர்கள். அவர்களுடைய வளர்ப்பால் இளஞ்சிங்கம் போல வலிமை பெற்றவன் நாராயணன். அவனிடம் நாம் பறை பெற வேண்டும். 'பறை' என்பது 'தாஸனாயிருப்பதற்கான சின்னம்' என வைணவ உரைகாரர் குறிப்பிட்டுள்ளனர். எனவே கண்ணனை வழிபடுவதற்கு பறை பெறுவதற்கு அவன் வாழும் மாளிகைக்குச் செல்ல வேண்டும். அதனால் முதலில் நந்தகோபன் மாளிகைக்குச் சென்று அங்குள் வாயில் காப்போனிடம் பணிவாக வேண்டுவதாகப் பாடல் பாடியுள்ளாள்.

"நாயகனாய் நின்ற நந்தகோ பனுடைய
கோயில் காப்பானே கொடித் தோன்றும் தோரண
வாயில் காப்பானே மணிக்கதவம் தாள் திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்ன முன்னம் மாற்றாதே யம்மா நீ
நேய நிலைக்கதவம் நீக்கலோ ரெம்பாவாய்"

(திருப்பாவை : 16)

செல்வச் செழிப்புள்ள நந்தகோபனுடைய மாளிகைக்குள் வாயில் காப்போன் அனுமதியின்றி இளம் பெண்கள் உள்ளே செல்ல முடியாது. இன்னும் உள்ளே போவதற்குரிய காரணத்தையும் சொல்ல வேண்டும். எனவே கொடியும் தோரணமும் கொண்ட நிலைக்கதவின் முன்னே நின்று பேசுகிறார்கள். மாயன் நேற்றே பறைதருவதாகச் சொன்ன செய்தியை வாயில் காப்போனிடம் விநயமாக எடுத்துக் கூறுகிறார்கள் தாங்கள் தூய்மையாக வந்திருப்பதையும் கண்ணனைத் துயில் எழுப்ப வேண்டும் எனவும் கேட்டு மறுக்க வேண்டாமென மன்றாடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த பாடலில் நந்தன் கோபன். யசோதை, பலதேவன் ஆகியோரை எழுப்புவதகாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அறஞ்செய்யும் நந்தகோபன், குளலவிளக்கான யசோதை, உலகளந்த மாயவன் செல்வன் பலதேவன் ஆகியோரை எழுப்பும் காட்சியமைந்துள்ளது. மாளிகையில் அவரவர் இருப்பிடத்தையும் காட்டுகிறாள். அந்த வகையில் அடுத்து நந்தகோபாலன் மருமகளான நப்பின்னையை எழுப்புகின்றனர். இங்கு மீண்டும் விடிகாலையின் குரல்களை எடுத்துக்கூறுகின்றனர்.

"உந்து மத களிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய்
கந்தம் கமழும் குழலீ கடைதிறவாய்
வந்தெங்கும் கோழியழைத்தன காண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவுனகாண்
பந்தார் விரலி உன்மைத்துனன் பேர் பாட
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்"

(திருப்பாவை : 18)

எல்லையில்லாத தோள்வலிபடைத்தவன் நந்தகோபன். அவனது மருமகள் நப்பின்னை. அவளே விடிகாலையிலும் துயில்கிறாள் கோழிகள் எல்லாம் பொழுது விடிந்ததைக் கண்டு குரல் கொடுத்து நிற்கின்றன. மாதவிப் பந்தல் மேல் வந்து குயில்கள் கூவுகின்றன. இந்த ஒலிகளைக் கேட்டும் இளம்பெண் நப்பின்னை இன்னமும் துயில் எழாதிருப்பது வியப்பாக உள்ளது. அவள் எழுந்து வந்து மணிக்கதவம் திறந்து எம்மை கண்ணனைத் துயிலெழுப்ப அனுமதிக்க வேண்டும். இது ஒரு நாகரிகமான வேண்டுகோள். அடுத்த பாடல்களில் நப்பின்னை விடிகாலையில் துயிலெழாமைக்குரிய காரணம் கூறப்பட்டுள்ளது. தன்னுடைய மணாளனின் துயிலை நப்பின்னை கலைக்க விரும்பவில்லை. ஏனென்றால் அவன் அவளுடைய கொங்கைமேல் கிடந்து உறங்குகிறான். நப்பின்னைக்கும் தன் கணவனை விட்டுப் பிரிய விருப்பமில்லை. அதனால் அவளும் சேர்ந்து துயில்கிறாள். எனவே இருவரையும் எழுப்ப வேண்டியுள்ளது. அவர்கள் இருவரும் துயில்கின்ற காட்சியை வருமாறு பாடல் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குத்து விளக்கெரியக் கோட்டுக்காற் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய்"

(திருப்பாவை : 19)

படுக்கையறையை ஆண்டாள் காட்டுகிறாள். குத்து விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது. இரவு முழுவதும் அது எரியும். இது அக்காலத்திய நடைமுறை. யானைக்கோட்டுக் கால்கள் கொண்ட உயர்ந்த கட்டில். அதன் மேல் மென்மையான பஞ்சணை. அதன்மேல் நப்பின்னையும் கண்ணனும் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். இக் காட்சியைப் பார்ப்பது அநாகரிகமானது எனக் கருதுவதற்கு இடமுண்டு. அதனால் அத்தகைய எண்ணம் தோன்றாமல் ஆண்டாள் இருவரையும் துயில் எழுப்பப் பாடுகிறாள். அடுத்து வரும் இரு பாடல்கள் அவ்வாறு அமைந்துள்ளன. இருவரையும் ஒருசேர எழுப்பி அருள்பெற எண்ணும் பெண்களை ஆண்டாள் இனங்காட்டுகிறாள். வையகவாழ்க்கை இன்பங்களை விட மேலான ஒரு பெருவாழ்வைப் பெண்கள் பெற வழிகாட்டுகிறாள். விடிகாலையில் செய்யும் வழிபாடே பயன்தரும் எனப் பாடல்களிலே குறிப்பிடுகிறாள்.

நாராயணனையும் நப்பின்னையையும் துயில் எழுப்பும் போது மிகவும் பக்தி பூர்வமாகவே பாடி எழுப்புகின்றனர். திருமாலின் அருளாற்றலையே விதந்து பேசுகின்றனர். நப்பின்னையிடம் அனுமதிகேட்டு நாராயணன் உறங்கும் கட்டிலருகே போய் வணங்கி நிற்கின்றனர். அவனுடைய செங்கமலக்கண்களால் திங்களும் கதிரவனும் போல எம்மை நோக்கி அருள் செய்ய வேண்டுமெனக் கேட்கின்றனர். நாராயணன் மாளிகையிலிருந்து புறப்பட்டுத் திருச்சபைக்கு வந்து தம்முடைய வேண்டுகோளை ஆராய வேண்டுமெனக் கேட்கின்றனர்.

### அருள் வேண்டல்

அருள் வேண்டிப் பாடும் பாடல்களாக அமைந்த மூன்று பாடல்களிலும் ஒரு சிறப்பான வேண்டுதல் விளக்கப்பட்டுள்ளது. நாராயணன் ஆற்றல்களைப் பின்வருமாறு பாடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்றிவ் உலக மளந்தாய் அடிபோற்றி
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல் போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி
வென்று பகை கெடுக்கும் நின்கையில் வேல்போற்றி"

(திருப்பாவை : 24)

வாமன வடிவம் எடுத்து வையகத்தை அளந்த திருமாலின் திருவடியைப் போற்றுகின்றனர். தென்னிலங்கைக்குச் சென்று இராவணனை அழித்த உன் பேராற்றலை வணங்குகிறோம். தாய்மாமன் கம்சனை சகடம் உதைத்து அழித்தவா போற்றி. பல்வேறு பகைகளையும் அழிக்கின்ற திருமாலை அப்பெண்கள் வணங்கித்தாம் வேண்டிவந்ததை உரைக்கின்றார்கள்.

"என்றென்றுன் சேவகமே யேத்திப் பறை கொள்வான்
இன்று யாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்"

இதே போன்று அடுத்த பாடலில்

நெருப்பென்ன நின்ற நெடுமாலே உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதி யாகில்
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்"

இங்கே பறை யென்பது திருமால் அடியவர்களாக என்றென்றும் வாழும் நிலையையே குறிக்கின்றது. அந்த உரிமையை நாம் பெற்றால் பல்லாண்டு காலம் நாம் உன்னை இசைபாடி வழிபடுவோம். இந்தப் 'பறை' என ஆண்டாள் குறிப்பிடும் வழிபாட்டுரிமை பெண்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்ற வேண்டுகோளாக உள்ளது. கோயில் வழிபாட்டில் பெண்களின் பங்களிப்பு முழுமையடைய வேண்டுமென ஆண்டாள் விரும்புகிறாள். நீராடித் தூய்மையாக வந்து வழிபாட்டு நடைமுறைகளில் பெண்கள் பங்கை நிறைவேற்றிய பின்பே தமது நோன்பை நிறைவு செய்ய வேண்டும். அறியாத பெண்பிள்ளைகளாய நாம் உன்மீது கொண்ட பேரன்பினாலே இவ்வாறு உன்னை வந்து துயிலெழுப்பினோம், 'அதற்காக நீ எம்மீது சீற்றங்கொள்ளாதே. இந்த மார்கழி நீராடல் நோன்பு நிறைவேற நீயே அருள்புரிவாய்' எனக்கேட்ட ஆண்டாள் பின்னர் நோன்பு நிறைவு செய்யும் முறைமையை ஒரு பாடலில் அமைத்துள்ளாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா உன்றன்னைப்
பாடிப்பறை கொண்டு யாம் பெறும் சன்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம் அதன் பின்னே பாற்சோறு
மூட நெய் பெய்து முழங்கை வழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்"

(திருப்பாவை : 27)

இவ்வளவு நாட்களாக நாம் ஏற்ற கட்டுப்பாடான நடை முறைகளை விட்டு இயல்பான வாழ்வைமேற்கொள்வோம். பறையை யாம் பெறுவதால் நாடு புகழும் பரிசையாம் பெறுவோம். மீண்டும் எம்முடைய அணிகலன்களை எல்லாம் அணிவோம். சூடகம், தோள்வளை, தோடு, செவிப்பூ பாடகம் என இளம் பெண்கள் தாம் நோன்புக்காகத் துறந்திருந்த அணிகலன்களை மீண்டும் அணிந்து தம்மை அழகு படுத்துவர். ஆடைகளையும் அணிவார்கள். அதன் பின்னர் பாற்சோற்றை நெய் நிறைய ஊற்றி உண்பர். மீண்டும் தம்முடைய நாளாந்த வாழ்வியல் முறையைத் தொடர்வதாக ஆண்டாள் குறிப்பிடுவது மார்கழி நீராடல் நோன்பு ஒரு திங்கள் முடியும் வரையும் அநுட்டிக்கப்பட்டதை உணர்த்துகிறது.

**வழிபாட்டுறுதி செய்தல்**

திருப்பாவையில் 29 ஆவது பாடல் வழிபாட்டுறுதி செய்யும் பாடலாக அமைக்கப்பட்டுள்ளது.

"சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்து உன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்று காண் கோவிந்தா
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கு உன்றன்னோ
டுற்றோமே யாவோம் உனக்கேநா மாட்செய்வோம்
மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலில் ஆண்டாள் விடிகாலையைச் சிற்றஞ்சிறு காலை என அழகாகக் குறிப்பிட்டுள்ளார். இதனை 'வைகறை' எனக் கூறுவர். காலையிலே வழிபாடு செய்யும் காரணத்தையும் பாடலிலே அவள் குறிப்பிட்டுள்ளாள். பசுக்களை மேய்த்து வாழும் ஆயர்குலத்திலே பிறந்து எம்முடைய குற்றேவல்களை நீ ஏற்க வேண்டினோம். இந்தப் பறையை இன்று பெறுவதற்காக மட்டும் நாம் இத்தகைய வழிபாட்டை மேற்கொள்ளவில்லை. ஏழேழ் பிறவிகளிலும்இதைத் தொடரவிரும்புகிறோம். உன்னோடு உற்றவராகவே வாழ விரும்புகிறோம். உனக்கே தொண்டு செய்து வாழ எண்ணுகிறோம். எங்களுடைய மற்றைய இழிந்த காமங்களையெல்லாம் நீ மாற்றிவிட வேண்டும். இப்பாடலில் ஆண்டாள் இளமையிலே வழிபாடு தேவை என்பதை வலியுறுத்தியுள்ளாள். முப்போதும் இறைவழிபாடு செய்வது பெண்களின் ஏனைய இல்லறக் கடமைகளைச் செவ்வனே ஆற்றுவதற்குத் தடையாகலாம். எனவே வைகறையில் எழுந்து நீராடி வழிபாடு செய்வது அதைத் தொடர்ந்து செய்வதற்கு வாய்ப்பளிக்கும்.

ஆண்டாள் கூறும் வழிபாட்டுறுதி எல்லாப் பெண்களையும் ஒரு சீரான வழிபாட்டு நெறியைப் பின்பற்ற வழிகாட்டுகிறது. வேற்று வழிபாட்டு நடைமுறைபாற் செல்லாது திருமாலையே வழிபடல் வேண்டும் என்ற நம்பிக்கையையும் ஊட்டுகிறது. பெண்களின் மார்கழி நீராடல் ஒரு நோன்பாக 30 நாட்கள் தொடர்ந்திருக்க வேண்டும். அதனால் ஆண்டாள் 30 திருப்பாவைப் பாடல்களைப்பாடி மார்கழித்திங்களை வரையறை செய்துள்ளாள். ஆண்டாளின் திருப்பாவைப் பாடல் பெண்களைப் பக்தி நெறியிலே செலுத்துவதற்கு ஒரு செயற்பாடாக உள்ளது.

மழையை வேண்டி ஆண்டாள் பாடியது பெண்கள் மார்கழி நீராடல் செய்வதற்கு மட்டுமல்ல வையகம் முழுவதும் வளம் பெறவே மழையை வேண்டுகிறாள். திருப்பாவைப் பாடலின் நிறைவான முத்திரைக்கவி பாடல்களைப் படிப்பதால் ஏற்படும் பயனையும் பாடல் பாடியவரையும் பதிவு செய்துள்ளது.

வங்கக்கடல் கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறை கொண்ட வாற்றை அணிபுதுவைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்கமலத் தண் தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத்தமிழ் மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார் ஈரிண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள் பெற் றின் புறுவ ரெம்பாவாய்"

(திருப்பாவை : 30)

நாராயணனை இளம் பெண் வழிபட்டு பறை பெற்றதை ஆண்டாள் பாடிய இப்பாடல்களை பட்டர் மகளான கோதை 'சங்கத் தமிழ்மாலை' முப்பது எனக் குறிப்பிட்டுள்ளாள். இப்பாடல்களைப் படிப்பவர் திருமால் அருளை முழுமையாகப் பெற்று இன்பமாக வாழ்வர். மார்கழி நோன்பு நடைமுறையினைப் பின்பற்றாதவரும் இப்பாடல்களைப் படித்தாலே போதும். பயனைப் பெறுவர்.

திருப்பாவைப் பாடல்களில் பெண்கள் மட்டும் கூட்டாகச் செய்யும் வழிபாடு பதிவு செய்யப்பட்டிருப்பது ஒரு தனிச்சிறப்பாகும். இன்னும் பாடல்களிலே பயன்படுத்தப்பட்டுள்ள பெண்விளிச் சொற்களும் தொடர்களும் இதற்குச் சான்றாகவுள்ளன. அவற்றை வருமாறு காணலாம்.

| | |
|---|---|
| பாடல் : 1 | நேரிழையீர், செல்வச் சிறுமீர்காள் |
| பாடல் : 6 | பிள்ளாய் |
| பாடல் : 7 | பேய்ப்பெண்ணே, நறுங்குழல் ஆய்ச்சியர் நாயகப் பெண் பிள்ளாய் |
| பாடல் : 8 | கோதுகலமுடைய பாவாய் |
| பாடல் : 9 | மாமன் மகளே, மாமீர் |
| பாடல் : 11 | கோவலர் தம் பொற் கொடியே, புற்றரவல்குல் புனமயிலே செல்வப் பெண்டாட்டி |
| பாடல் : 12 | நற்செல்வன் நங்காய் |
| பாடல் : 13 | போதரிக் கண்ணாய், பாவாய் |
| பாடல் : 14 | நங்காய் |
| பாடல் : 15 | எல்வே இளங்கிளியே, நங்கைமீர் |
| பாடல் : 16 | அம்மா |
| பாடல் : 17 | யசோதாய் |
| பாடல் : 18 | மருமகளே, நப்பின்னாய், கந்தம் கமழும் குழலி பந்தார் விரலி |
| பாடல் : 20 | நப்பின்னை நங்காய், திருவே |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு விளிச் சொற்களை ஆண்டாள் பயன்படுத்தியபோது ஒரு சமூகத்து வாழும் பலதரப்பட்ட பெண்களையும் உள்ளடக்கியே பாடல்களைப் பாடியிருப்பது தெளிவாகிறது.

**பாடல்களின் கட்டமைப்பு – திருவெம்பாவை**

திருவெம்பாவைப் பாடல்களின் கட்டமைப்பு வருமாறு அமைந்துள்ளது.

1. துயிலெழுப்பல்
2. வழிபாட்டு நோக்கம்
3. வழிபாடு உசாவல்
4. நீராடுதல்
5. மழைவேண்டல்
6. வழிபாட்டுறுதி கூறல்
7. வழிபாட்டு மரபு

மணிவாசகர் பாடியுள்ள பாடல்கள் முன்னரே இருந்த ஒரு வழிபாட்டு நடைமுறையை மீள் பதிவு செய்துள்ளன.

**துயிலெழுப்பல்**

திருவெம்பாவைப் பாடல்கள் இருபது அவற்றின் முதல் எட்டுப் பாடல்கள் பெண்களைத் துயில் எழுப்பும் பாடல்களாக அமைந்துள்ளன. வைகறையிலே எழுந்து நீராடச் செல்வதற்காக ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று பெண்கள் துயிலும் பெண்களை எழுப்புவதாக மணிவாசகர் பாடியுள்ளார். பின்வரும் முதற்பாடல் எழுப்பும் காட்சியை எம்கண்முன்னே காட்டுகிறது.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின் செவிதான்
மாதேவன் வார்கழல் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதி வாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே யென்னே
ஈதே எந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்"

(திருவெம்பாவை : 1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண் வீட்டில் உறங்கிக் கொண்டிருக்கிறாள். அவளை எழுப்பி நீராட அழைத்துச் செல்வதற்குத் தோழிகள் வருகிறார்கள். அவள் வீட்டு வாயிலில் நின்று முதலும் முடிவும் இல்லாத இறைவனைப் பாடுகிறார்கள். ஆனால் அவள் உறக்கம் கலையவில்லை. அதனால் அவளிடம் தோழிமார் உன்னுடைய காது கொடுமையான காதுதான் எனக் குறிப்பிடுகிறார்கள். இறைவன் புகழ்பாடக் கேட்டவுடனே விம்மி விம்மி மெய்மறக்கும் இயல்புடையவள் இன்று இப்படிப் படுக்கையில் கிடந்து துயில்கிறாளே என அவர்கள் வியப்போடு நிற்கிறார்கள். பாடலின் இறுதியடியில் 'ஈதே எம் தோழி' என்ற தொடர் இதனைத் தெளிவாக விளக்குகிறது.

துயிலெழுப்பும் நிலையைச் சிறந்த கூற்று நிலையாக மணிவாசகர் பாடியுள்ளார். இறைவனிடம் கொண்ட பக்திநிலைபற்றியே எப்பொழுதும் உரையாடும் இளம் பெண் இப்படி வைகறையில் துயில்கிறாளே என வியப்படைந்த தோழிமார் அவளைக் கிண்டல் செய்து பாடுகிறார்கள். அவளுக்கு அதைக் கேட்டதும் சினம் ஏற்படுகிறது. 'ஈசனுக்கு அன்புடையராக வாழும் நாம் இவ்வாறு பேசுவது தகாது' எனக் கூறுகிறாள். இவ்விடத்தில் தாம் அன்பு கொண்ட இறைவனைப் பற்றி வருமாறு கூறுகின்றார்கள்.

> "...............விண்ணோர்கள் ஏத்துதற்குக்
> கூசும் மலர்ப் பாதந் தந்தருள வந்தருளும்
> தேசன் சிவலோகன் தில்லைச் சிற் றம்பலத்துள்
> ஈசனார்க் கன்பர் யாம் ஆரேலோரெம்பாவாய்"
>
> (திருவெம்பாவை : 2)

மேலான விண்ணவர்களே எம்பெருமானைப் போற்றிப் புகழ்வதற்குத் தாம் தகுதியவற்றவர்களெனக் கூறுகின்றனர். ஆனால் அந்த ஈசன் ஒளிமயமானவன். தில்லைச்சிற்றம்பலத்து ஈசன் அவன் நமக்கு அருள் செய்யக் காத்திருக்கிறான். அவனை நாம் சென்று வழிபட வேண்டும். 'தோழியே நீ இதனை எண்ணிப்பார்' என விளக்கமாகக் கூறுகிறார்கள்.

தொடர்ந்த ஆறுபாடல்களில் உறங்கும் தோழிபற்றியே பேசப்பட்டுள்ளது. அவளைத் துயிலெழுப்பும் காட்சி ஒரு நாடக உரையாடல் போலமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளி மொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே"

(திருவெம்பாவை : 4)

ஒளி பொருந்திய முத்துப் போன்ற வெண்மையான பற்களை உடைய இளம் பெண்ணே உனக்கு இன்னும் பொழுது விடியவில்லையோ என ஒருத்தி கேட்கிறாள். அதற்குப் படுக்கையிலே கிடப்பவள் தானும் ஒரு கேள்வியையே கேட்கிறாள். 'அழகான கிளிபோலக் கொஞ்சிப் பேசுகின்ற நமது எல்லாத்தோழிமாரும் வந்து விட்டார்களா?' அப்போது எழுப்ப வந்தவர்களில் இன்னொருத்தி பதில் கூறுகிறாள். வந்தவர்களை எண்ணிவிட்டு உனக்கு வந்து மறுமொழி சொல்கிறேன். ஆனால் நான் வரும்வரைக்கும் நீ மீண்டும் கண்ணுறங்கி காலத்தை வீணாகக் கழிக்காதே.' எனினும் உறங்கும் எண்ணத்தோடிருப்பவள் மீண்டும் உறங்கிவிடக் கூடும் என்பதால் ' நீயே எழுந்து வந்து எண்ணிக்கை சரியாக இருக்கிறதா என்று பார்! அப்படிக்குறைவாக இருந்தால் அவர்களும் எழுந்து வருமளவும் நீயும் உறங்கலாம்.' என்று கூறி அவளைப் படுக்கையிலிருந்து எழுந்து வெளியே வரத் தூண்டுகிறாள். ஆனால் உள்ளே உறங்கும் பெண்ணோ எழுந்து வரவில்லை. இதனால் அவளுடைய குணவியல்புகளைச் சுட்டிக்காட்டி எழுப்ப முயற்சி நடக்கிறது. அது வருமாறு பாடல்களில் அமைந்துள்ளது.

"மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன் வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமேவிண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடி சிவனே சிவனே யென்று
ஓலம் இடினும் உணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்"

(திருவெம்பாவை : 5)

படுக்கையிலே கிடக்கின்ற பெண் எப்போதும் இறைவனை நன்கு உணர்ந்தவள் போலப் பேசுகின்ற இயல்பையுடையவள். இறைவனோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமாலும் நான்முகனும் காணமுடியாத பெருமலை அத்தகைய வனை இந்தப் பெண் அறிவோம் என்று கூறுவது பொய்மையான பேச்சாகும். எனவே வஞ்சமான பக்தியையுடையவளே என்று அவளைக் குறிப்பிடுகின்றனர். அவளுடைய பொய்மையான பக்தியுணர்வால் தான் நாம் சிவனே! சிவனே என்று பெருங்குரலில் பாடும்போதும் உணராமல் உறக்கம் கலையாமல் இருக்கிறாள்.

இவள் எங்களிடம் நாளை நானே வந்து உங்களை எழுப்புவேன் என்று கூறினாள். இப்போது அந்த உறுதி மொழியை முற்றாக மறந்து வெட்க மின்றி உறங்குகிறாள். அந்த உறுதிமொழியைத் தோழிமார் நினைவூட்டுகிறார்கள்.

"மானே நீ நென்னலை நாளை வந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ"
(திருவெம்பாவை :6)

'சிவன் புகழ்பாடி அதை நீ செவிமடுக்க வேண்டும் என நாம் எண்ணிவந்தோம். ஆனால் நீயோ வாய்திறக்காமல் இருக்கின்றாயே. நீ உருகி சிவனை நினைந்து பாட வேண்டும். எமக்காகவும் ஏனையவர்களுக்காகவும் நீ பாட வேண்டும் எனவே நீ துயில் கலைந்து எழுந்து வரவேண்டும். நீ எப்போதும் சிவனுடைய திருச்சின்னங்களின் ஒலியைக் கேட்டவுடனே சிவனே! என்று உருகி வாய் திறக்கும் வழக்கமுடையவள். அவனைப் பற்றி நாம் பாடும்போது அவற்றைக் கேட்ட பின்னரும் வாளாவிருப்பது ஏனோ! அவ்வளவுக்கு உறக்கத்தில் விருப்புக் கொள்ளலாமா? நாம் கூறும் கருத்துகளை நீ ஏற்று ஆராய்ந்து பார்' எனத் தோழியர் கூறுகின்றனர்.

அடுத்து இயற்கைத் தோற்றத்தைக் காட்டி அவளை எழுப்புகின்றனர்.

"கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்"
(திருவெம்பாவை : 8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிகள் எழுந்து முதற்குரல் கொடுக்கின்றன. அதைத் தொடர்ந்து பறவைகள். எல்லாம் ஒலி எழுப்புகின்றன. இக் குரல்கள் இயற்கையின் குரல்கள். இக்குரல்களைத் தொடர்ந்து கோயில் வெண்சங்கும் குழலும் ஒலிக்கப்படுகின்றன. அவை மனிதரால் ஏற்படுத்தப்படும் வழிபாட்டு ஒலிகள். மார்கழி மாதத்தில் விடிகாலையிலேயே கோவிலில் வழிபாட்டு நடைமுறைகள் தொடங்கிவிடும். 'நாமும் எமது சிவப்பரம் பொருளைப் பாடிப்பரவுகின்றோம். இந்த ஒலிகளையெல்லாம் நீ கேட்கவில்லையா? அப்படி என்ன உறக்கமோ? ஊழிக்காலத்திலும் அழியாமல் நிலைபெற்று விளங்கும் ஒப்பற்ற ஒருவனாகிய எம்பெருமான் எங்களுக்கு என்றென்றும் அருள்புரிகின்ற சிவனைப் பாடவேண்டும். நீ உனது துயிலைக் கலைத்து எழுந்து வா' என அவளிடம் உரைக்கின்றனர்.

**வழிபாட்டு நோக்கம்**

திருவெம்பாவை ஒன்பதாம் பாடல் மார்கழி நீராடல் வழிபாட்டின் நோக்கத்தை விளக்கியுள்ளது. துயில் கலையாத பெண்ணிடம். நோன்பின் இலக்கை விளக்குவதாகப் பாடல் அமைந்துள்ளது.

"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம் பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்
இன்னவகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமே லோ ரெம்பாவாய்"

(திருவெம்பாவை : 9)

எம்பெருமான் சிவபெருமான் முன்னைய பழம்பொருள் களுக்கெல்லாம் மிகப் பழமையானவன் பின்னைய புதியவற்றுக்கும் மிகவும் புதியவன். அத்தகைய பெருமை படைத்த உன்னைத் தலைவனாகப் பெற்ற நாங்கள் உன்னுடைய சிறப்பான அடியவர்களுடைய அடிகளைப் பணிந்து வணங்குவோம். அவர் களுக்கே தொண்டு செய்வோம். அத்தகைய அடியாரே எமக்குக் கணவராகும் தகுதியுடையவராவாள். அவர்களுக்கு அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பியவற்றைச் செய்வோம். இத்தகைய வாழ்வை எம்பிரானே எமக்கு அருளவேண்டும். அவ்வாறு அருளுமாயின் எமக்கு எந்தக்குறையுமே ஏற்படாது. இத் தகுதியை நாம் பெறுவதற்கு ஏற்ற செயற்பாடுகளை நாம் செய்யவேண்டும். இதை நீ ஏற்று எண்ணிப்பார். இப்பாடல் பாவை நோன்பு நல்லதொரு கணவரை அடையும் நோக்குடன் பெண்களால் மேற்கொள்ளப்படுவதாக விளக்கம் தருகிறது. சிவனை வழிபடும் அடியவரையே வாழ்க்கைத் துணையாகப் பெறப் பெண்கள் விரும்புகின்றனர். ஆனால் ஆண்டாள் திருப்பாவைப் பாடலில் இத்தகைய விளக்கம் எதுவும் இல்லையென்று இங்கு குறிப்பிட வேண்டியது. மணிவாசகர் வாழ்க்கைத் துணையாக வரும் ஆணுக்கு ஒரு தகுதிப்பாட்டை வரையறை செய்துள்ளார். இறைவனுக்கு அடிமைபூண்டு தொண்டு செய்து வாழ்வியல் பேணும் இல்லறம் ஒன்றையும் இப்பாடலிலே விளக்கிக் காட்டியுள்ளார்.

**வழிபாடு உசாவல்**

மனித வாழ்க்கையைச் சீர் பெறச் செய்யும் இறை வழிபாட்டை எப்படி அறிவது? எம்பெருமான் சிவனைப் பற்றி எவ்வாறு அறிவது? அதற்குத் திருவெம்பாவைப் பாடல் வழிகாட்டுகிறது.

“பாதாளம் ஏழினுங் கீழ் சொற் கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை ஒரு பால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்”

(திருவெம்பாவை : 10)

சிவனுடைய திருவடிகள் பாதாள உலகம் ஏழையும் கடந்து அப்பாலும் செல்லக்கூடியவை. அவனுடைய திருமுடியோ மணமுடைய மலர்களால் தொடுக்கப்பட்ட மாலை சூடியது. எல்லாப் பொருள்களின் முடிவுக்கும் முடிவானது. பெண்ணைப் பாகமாகக் கொண்டமையால் அவன் திருமேனி ஒன்றல்ல. மறைகளும் விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் பாடிப் பரவினாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றிலும் சொற்களுக்குள் அடக்கமுடியாத அருமையும் பெருமையும் வாய்ந்தவன். எல்லோருக்கும் ஒப்பற்ற தோழனுமாவான் அவன் அடியவன் உள்ளத்தில் என்றும் குடியிருப்பவன். குற்றம் சிறிதும் இல்லாத குலத்தைச் சேர்ந்த அரன் அவனே. அவனுடைய திருக்கோயிலிலே பணிசெய்கின்ற பெண் பிள்ளைகளே அத்தகைய வனுடைய ஊர்தான் எது? பெயர்தான் எது? அவனுக்கு வேண்டியவர் தாம் யாவர்? வேண்டாதவர் தாம் யாவர்? அவனைப் பாடித் துதிக்கும் வகைதான் யாது? இவற்றை அறிய வேண்டும் என ஓர் உசாவல் நடைபெறுகிறது. ஒரு வழிபாட்டு நடைமுறையை மேற்கொள்வதற்கு அதுபற்றிய விளக்கங்களை எல்லோரும் அறிய விரும்புவர். அதனையே பெண்கள் எண்ணுகின்றனர். இப்பாடலில் இதுபற்றிய விளக்கங்களை திருக்கோயில்களிலே தொண்டராகப் பணிபுரியும் பெண்பிள்ளைகளிடமே கேட்டு அறியலாம் இக்கருத்தின் மூலம் மணிவாசகர் ஒரு செய்தியைக் கூறியுள்ளார். அக்காலத்திலே பெண்கள் திருக்கோயில் தொண்டுகளைச் செய்துள்ளார்கள். அவர்களுக்கு சிவனுடைய பெருமைகளும் அருள்திறங்களும் நன்கு தெரிந்திருந்தன. வழிபாட்டு நெறிமுறைகளையும் அவற்றுக்கான விளக்கங்களையும் தரவல்லவர்களாக இருந்தனர். இப்பயிற்சியை அவர்களுடைய தாய்மாரே அவர்களுக்குப் பயிற்றி இருந்தனர். எனவே வழிபாடு என்பது மரபாகப் பேணப்பட்டுவந்த ஒரு நடைமுறை என்பது இதன் மூலம் தெளிவாகிறது. "கோயிற் பிணாப் பிள்ளைகாள்" எனக் கோயிலிலே தொண்டாற்றும் பெண்களைப் பாடலிலே சிறப்பாகப் பதிவுசெய்துள்ளார்.

**நீராடுதல்**

திருவெம்பாவைப் பாடலில் நீராடல் பற்றி ஏழு பாடல்கள் அமைந்துள்ளன. மார்கழி நீராடல் செய்த பின்பே இறைவனைச் சென்று வழிபடும் மரபு முற்காலத்தில் இருந்துள்ளது. இதனை மணிவாசகர் பாடல் வருமாறு பதிவு செய்துள்ளது.

"மொய்யார் தடம் பொய்கை புக்கு முகே ரென்ன
கையால் குடைந்து குடைந்துன் கழல் பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல் போற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யா வெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயா நீ ஆட் கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உயந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்"

(திருவெம்பாவை : 11)

நீராடச் செல்லும் பெண்கள் அகன்ற பொய்கையிலே புகுந்து நீராடுகின்றனர். நீண்ட கூந்தலுடைய இளம் பெண்கள் நீரிலே மூழ்கி எழுகின்றனர் கைகளாலே நீரைக்குடைகிறார்கள். அந்த வேளையில் இறைவன் கழல்களைப் போற்றிப் பாடுகிறார்கள். அவர்களது நீராடல் விளையாட்டு நிலையில் நடைபெறவில்லை. பெண்கள் நீராடும் காட்சியை பழந்தமிழிலக்கியங்களில் 'புனலாட்டு' எனக் குறிப் பிட்டுள்ளனர். தம்மை 'வழியடியோம்' எனக் குறிப்பிட்டுள்ளனர். நாம் வழிவழியாகப் பல தலைமுறைகளாக உன்னை வழிபட்டதால் உன்னுடைய அடியாராக வாழ்கிறோம். அதனால் உன் திருவருளைப் பெற்று நலமாக வாழ்கிறோம். உன்னுடைய ஆட்கொள்ளும் விளையாட்டால் உனது அடியார்கள் கடைத்தேறுவார்கள். நாங்களும் அவ்வாறே கடைத்தேறுவதற்காக என்ன செய்ய வேண்டுமோ அவற்றை எல்லாம் நாங்கள் செய்து விட்டோம். எங்களை மீண்டும் பிறவிக்கடலில் சேராமல் காப்பாயாக எம்முடைய அன்புத் தோழியே நாம் சொன்னவற்றை ஏற்றுக்கொள். ஒருமுறை ஆராய்ந்து பார். இப்பாடல் மார்கழி நீராடலின் இன்னொரு சிறப்பைப் பதிவு செய்துள்ளது. நல்ல கணவரை அடைய வேண்டும் என்ற இலக்கிற்காக மட்டுமன்றி இப்பிறப்பு என்னும் பிணிப்பிலிருந்து விடுபட்டு இறைவனடி சேரவேண்டும் என்ற இலக்கையும் தெளிவுபடுத்தியுள்ளது. மார்கழியில் மட்டுமன்றித் திருக்கோயில் வழிபாட்டிற்குச் செல்லும் போது நீராட வேண்டும் என்னும் நடைமுறை இன்றும் மரபாக உள்ளது.

மணிவாசகர் நீராடும் சுனையாக இறைவனைக் குறிப்பிட்டுள்ளார். மனிதர்களைக் கட்டுப்படுத்துகின்ற பிறவித் துன்பங்களிலிருந்து ஆடுகின்ற நீர்ச்சுனையாக இருக்கிறான். அதனால் நீராடுகின்ற போது வீண் பேச்சுகள் பேசாமல் அஞ்செழுத்தை ஓதியபடி நீராட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் நீராடுகின்ற போது கையில் அணிந்த வளையல்கள் ஒலிக்கும். இடையிலணிந்துள்ள மேகலை ஆரவாரம் செய்யும். கூந்தலிலே அணிந்துள்ள பூமாலைகளின் மேல் அமர்ந்து வண்டுகள் ஒலி செய்யும். நீராடுகின்ற பொய்கையிலே உள்ள தாமரை போன்ற மலர்கள் மலர்ந்திருக்கும். இந்தச் சூழல் நீராடலை ஒரு மகிழ்ச்சியான செயற்பாடாகவே செய்யத் தோன்றும். ஆனால் அவ்வாறு செய்யாமல் ஒரு வழிபாட்டு நடைமுறையாகவே நீராடலைப் பெண்கள் செய்வதாக மணிவாசகர் பாடியுள்ளார். இறைவன் திருப்பாதங்களைப் பாடி நீராடுவது மார்கழி நீராடலின் தனிச்சிறப்பாக உள்ளது. இறைவன் தீர்த்த நீராக உள்ளவன் என்பதைத் தேவாரம் பாடியவர்களும் வருமாறு குறிப்பிட்டு உள்ளனர்.

'தீர்த்தனைச் சிவனைச் சிவலோகனை' (அப்பர் : 115 : 2)

'பூந்துருத்தி நகர்த் தீர்த்தன்' (அப்பர் : 145 : 2)

தீர்த்தனைத் தென் கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேனானே' (அப்பர் : 232 : 1)

'தீர்த்தன் சிவலோகன் நீயே யென்று' (அப்பர் : 254 : 2)

'தீர்த்தன் நீ' (சுந்தரர் : 77 : 7)

மார்கழி நீராடல் இறைவழிபாடு செய்வதற்கு ஏற்றதொரு சிறப்பான காலமென்பதை மணிவாசகர் பின்வரும் பாடலில் வெகுநுட்பமாக விளக்கியுள்ளார்.

"பைங்குவளைக் கார் மலராற் செங்கமலப் பைம் போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார் வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப் பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்"

(திருவெம்பாவை : 13)

இப்பாடல் நீராடும் இடத்தை மடு எனக் குறிப்பிடுகிறது. மடு என்பது படித்துறை கட்டப்படாத இயற்கையான நீர் நிலையாகும். இந்த மடுவிலே பெண்கள் நீராடுவது வழக்கம். அந்த நீர் நிலையில் பசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவளை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. செங்கமல மலர்கள் நிறையப் பூத்திருக்கின்றன. நீர்ப்பறவைகள் வந்து ஆரவாரம் செய்கின்றன. நீர்ப்பாம்புகள் நிறைய நீருள்ளே உலாவுகின்றன. மக்கள் தங்கள் புறவழுக்கை நீக்குவதக்காக அங்கே வந்து நீராடுகிறார்கள். இக்காட்சி என்றும் காணுகின்ற ஒரு காட்சி. ஆனால் மார்கழி நீராடலின் போது இந்த நீராடும் பொங்குமடு இறைவனும் இறைவியும் போலத் தோன்று கிறதென மணிவாசகர் விளக்கியுள்ளார்.

இறைவின் திருக்கண்கள் போலக் குவளை மலர்களை உடைமை யாலும் இறைவனது திருமுகம் போன்ற செந்தாமரை மலர்களை உடைமையாலும் இறைவியின் திருக்கரங்களில் அணிந்துள்ள வளையல்கள் போலக் குருகினம் ஒலிப்பதாலும் நீர்ப்பறவைகளின் ஒலியும் வளையல்களின் ஒலியை ஒத்திருப்பதாலும் இறைவன் அணிந்துள்ள அரவங்கள் போன்று பிணைந்து கிடக்கும் நீர்ப்பாம்பு களையுடைமையாலும் உயிர்களின் மும்மலங்களை நீக்கும் பக்குவ முடையார் இறைவியினிடத்தும் இறைவனிடத்தும் வந்து சேர்வது போன்று தங்கள் உடலின் புறவழுக்கை நீக்கிக் கொள்ள விரும்புவோர் வந்து நித்தம் நீராடுவதாலும் அந்த நீர்நிலை இறைவனும் இறைவியும் போலத் திகழ்வதாக மணிவாசகர் விளக்கியுள்ளார். இத்தகைய ஒரு விளக்கம் மார்கழி நீராடல் வழிபாடு பெண்களுக்கு மட்டும் உரிய வழிபாடாக அமையாமல் எல்லோருக்கும் பொதுவான வழிபாடு என்பதையும் உணர்த்தும். பெண்கள் நீராடுகின்ற காட்சியைப் பெண்களே கூறுவது போல இரு பாடல்கள் அமைந்துள்ளன.

"காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள் பாடி யப் பொருளா மாபாடிச்
சோதித் திறம் பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா பாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம் பாடி யாடேலோ ரெம்பாவாய்"

(திருவெம்பாவை : 14)

பெண்கள் காதிலே உள்ள நீண்ட காதணிகள் ஆட நீராடுகின்றர். அவர்கள் அணிந்துள்ள பசிய அணிகலன்களும் ஆடுகின்றன. நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருண்ட கூந்தலும் ஆடுகிறது. வண்டுக்கூட்டமும் ஒலி செய்து ஆடுகின்றன. நாம் குளிர்மையான நீரிலே நீராடுவோம். அப்போது தில்லைச் சிற்றம்பலத்தைப் பாடுவோம். வேதப் பொருளாகிய சிவபெருமானைப் பாடுவோம். இறைவன் அந்த வேதப் பொருளாக நிற்கும் முறைமையைப் பாடுவோம். ஒளி வடிவாக உள்ள இறைவனின் அருட்டிறங்களைப் பாடுவோம் இறைவன் மார்பின் கொன்றை மலர் மாலையைப் பாடுவோம். இறைவனே எல்லாப் பொருட்கும் முதலாக இருக்கும் தன்மையைப் பாடுவோம். உயிர்களாகிய எம்மைப் பாதுகாக்கும் வளையல்களணிந்த உமையம்மையின் திருவடி அருள் திறத்தையும் பாடி நாம் நீராடுவோம். இப்பாடலிலே பாவை நோன்பு நோற்கும் பெண்களின் இயல்பை விளக்கியுள்ளார். அவர்கள் இறை சிந்தனையோடு இருக்கிறார்கள்.

திருவெம்பாவை பதினைந்தாம் பாடலில் மணிவாசகர் தன்னையே ஒரு பாவை நோன்பு நோற்கும் பெண்ணாகப் பாவனை செய்துள்ளார்.

"ஓரொரு கால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொரு கால் வாயோவாள் சித்தங்களி கூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொரு கால் வந்தனையாள் விண்ணோரைத்தான் பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவரில் வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தான்
வாருருவப் பூண் முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல் பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்"

(திருவெம்பாவை : 15)

இறுக்கமான கச்சணிந்த முலைகளையுடைய பெண்களே ஒரு பெண் மனம் மகிழ மிகவும் மனம் உருகி கண்ணீர் வழிய எம்பெருமான் என்று வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டிருப்பாள். அவன் புகழை வாய் ஓயாமல் சொல்லிக் கொண்டிருக்கிறாள். ஒருமுறை பூமியில் வந்து பிறந்ததும் சிவனையன்றி வேறெந்த விண்ணுலகத் தெய்வங்களையும் அவள் பணிந்து வணங்குவதில்லை. பேர் அரையனாகிய இறைவனுக்கு இவ்வாறு ஒருவர் பித்தராக முடியுமா? இத்தகைய ஒரு அடியவரை ஆட்கொண்டருளும் திறமையுடையவரும் யாரோ? அத்தகைய இறைவனை நாம் வாயாரப்பாடி பூம்புனலிற் பாய்ந்து நீராடுவோம். இப்பெண்ணின் அன்பின் திறத்தை நாமும் பெறுவதற்கு இறையருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிப்பாடுவோம். எனவே மார்கழி நீராடல் செய்யும் போது கூட்டாகப் பாடி வழிபடும் நடைமுறையும் இருந்ததை உணரமுடிகிறது. திருவெம்பாடல் பாடிய நோக்கத்தையும் இந்தப் பாடல் வெகு நுட்பமாகப் புலப்படுத்துகிறது. தன்னுடைய பக்தி அநுபவத்தை வெளிப்படுத்தப் பெண்கள் வழிபாட்டு நடைமுறையான மார்கழி நீராடல் நோன்பை ஒரு கட்டமைப்பாக வகுத்து மணிவாசகர் பாடியுள்ளார். 'திருவெம்பாவை' என அதற்குப் பெயரிட்டுள்ளார்.

**மழை வேண்டல்**

மணிவாசகர் பாடிய திருவெம்பாவையில் மழையை வேண்டிப் பாடும் பாடல் இறைவியின் அருளை விளக்குவதாக அமைந்துள்ளது.

"முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையான்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமான் அன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்"

(திருவெம்பாவை : 16)

இறைவன் அருள் போல மழை பொழிய வேண்டுதல் செய்யும் நடைமுறை திருவெம்பாவை பாடல்களில் பதிவு செய்யப்பட்டிருப்பது போலவே திருப்பாவைப் பாடலிலும் மழை பொழிய வேண்டுதல் செய்யும் நடைமுறை பதிவு செய்யப்பட்டுள்ளது. திருப்பாவையில் திருமால் மழையாக வரவேண்டுமென வேண்டுதல் நடைபெறுகிறது. திருவெம்பாவையில் இறைவி மழையாக வரவேண்டுமென வழிபாடு நடைபெறுகிறது.

மழையென்னும் இயற்கையருளை எல்லோரும் பெறுவதற்காகவே பாவைநோன்பு நோற்கப்படுவதை விளக்கிய மணிவாசகர் இறைவியும் இறைவனும் வலிய வந்து ஆட்கொள்ளும் அருள் திறத்தையும் விளக்கியுள்ளார். நிலவுலகில் வீடுகள் தோறும் எழுந்தருளி வருவார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகன்' என இறைவன் தனக்கு வலிய வந்து அருள் செய்து திருபெருந்துறையிலே திருவடி தீட்சை செய்ததை மீளவும் நினைந்து பாடியுள்ளார். இறைவன் திருவடிகளையே வணங்க எல்லோரும் செல்கின்றனர். நாமும் அவ்வழிபாட்டையே செய்ய வேண்டும் எனப் பெண்கள் பாடுவதாக ஒருபாடல் அமைந்துள்ளது.

"அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல் பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல் பாய் தாடேலோ ரெம்பாவாய்"

(திருப்பாவை : 18)

அண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் இறைவனுடைய திருவடித் தாமரைகளைச் சென்று வணங்குகின்ற விண்ணோரின் முடிகளிலுள்ள மணிகள் பொலிவிழந்தாற் போல இறைவனுடைய வலத்திருக்கண்ணாயமைந்த ஞாயிற்றின கதிர் ஒளி வருதலால் இருள் நீங்குகிறது. விண்மீன்கள் ஒளி மங்கிவிட்டன. அதனால் பெண்ணே! பெண்ணாகவும் ஆணாகவும் அலியாகவும் விண்ணாகியும் மண்ணாகியும் இவற்றிலிருந்து வேறாகியும் நிற்பவன் கண்ணுக்கு அமுதமாகி நிற்பவனை அவனுடைய கழல்களைப் பாடி நாம் நீராடுவோம். அண்ணாமலை என்னும் திருத்தலத்திலே திருவெம்பாவை பாடப்பட்டது என்பதற்கு இப்பாடலை ஒரு சான்றாகக் கொள்வர். இப்பாடலில் காலையில் தோன்றும் காட்சிகளை இறைவனின் கோலமாகக் காண்பதற்கு வழிகாட்டப்பட்டுள்ளது. கயிலைமலையான், ஈங்கோய்மலையான் என இறைவன் எழுந்தருளியிருக்கும் இடங்களால் அழைக்கப்படுவான். அண்ணாமலையான் என்பது அண்ணாமலை இறைவனது திருவுருவமாகவும் அமைந்திருப்பதாலும் அண்ணாமலையின் வடிவையுடை இறைவன் எனப் பொருள் கூறப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வழிபாட்டுறுதி கூறல்**

திருவெம்பாவை பெண்கள் நல்ல கணவரையடைய வேண்டும் என நோற்கும் நோன்பு என்பதற்குச் சான்றாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளதென்பர்.

"உங்கையிற் பிள்ளை யுனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னைப் ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக் கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்"

(திருவெம்பாவை : 19)

இப்பாடல் மார்கழி நீராடல் செய்யும் பெண்கள் ஒரு வழிபாட்டுறுதி செய்வது போல அமைந்துள்ளது. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று எல்லோரும் கூறும் பழமொழியைப் புதுப்பித்து இறைவனே நாங்கூறுவது தவறாகும் என அஞ்சுகிறோம். அதனால் எங்கள் பெருமானே உனக்கு நாங்கள் ஒன்றை உரைக்கின்றோம். அதைக் கேட்டருள வேண்டும். எங்கொங்கைகள் நின் அன்பரல்லாதவர் தோள்களைச் சேரக்கூடாது. எம்முடைய கைகள் உனக்கு அல்லாது மற்று எத்தெய்வத்திற்கும் எவ்வித தொண்டும் செய்யற்க. இரவாயினும் சரி பகலாயினும் சரி எம் பெருமானுடைய திருக்கோலத்தையன்றி வேறொன்றையும் எம்முடைய கண்கள் காணாதொழிக. இத்தகைய பேறுகளை எம்பெருமான் எங்களுக்குத் தந்தருளுவீராகில் ஞாயிறு கீழ்த் திசையிலன்றி வேறு எந்தத் திசையில் எழுந்தாலும் எமக்கு எதுவும் நேராது. இறையருள் வேண்டி நாம் வழிபாடு செய்யும் போது எமக்கு கணவர்களாக வருபவரால் எவ்வித இடையூறும் ஏற்படக்கூடாது. இத்தகையதொரு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதால் பாவை நோன்பு நோற்றலின் சிறப்புப் பயன் நல்ல கணவரை அடைவதே எனக்கருதப்படுகிறது. இறைவனுடைய எண்ணத்தோடு வாழ்பவருக்கு எவ்விதமான அச்சமும் இல்லையென அப்பரும் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வானந் துளங்கிலென் மண் கம்பமாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடுமாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண்
டுனே மொன்றில்லா ஒருவனுக்காட்பட்ட உத்தமர்க்கே"

(அப்பர் : 112 : 8)

வழிபாட்டு நிலையில் பெண்களின் மனவுறுதியை மணிவாசகர் பதிவு செய்வதன் மூலம் பெண்களுக்குரிய ஓர் ஆற்றலையும் வெளிப்படுத்தியுள்ளார். இளமைக்காலத்தில் மனம் பொறி வழிச் செயற்படாது தடுப்பதற்கு நோன்பு நடைமுறை பெரிதும் உதவியுள்ளது. ஆண்டாள் பாடலில் கூறப்பட்டிருப்பது போல வாழ்வியலிலே பேணப்பட்ட வரையறைகளைத் திருவெம்பாவை குறிப்பிடவில்லை. இன்னும் இளம் பெண்களைத் தவிரப் பிறருடைய வாழ்வியல் பற்றிய குறிப்புகளும் எதுவும் இணைக்கப்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

**வழிபாட்டு மரபு**

திருவெம்பாவையின் நிறைவான பாடல் வழிபாட்டு மரபை விளக்கிநிற்கிறது.

"போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றி யெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி யெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி யெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றி மால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி யா மார்கழி நீ ராடேலோ ரெம்பாவாய்"

(திருவெம்பாவை : 20)

இப்பாடலில் இறைவன் திருவடியை வழிபடும் மரபு நிலை விளக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றிற்கும் எப்பொருட்கும் முதலாக விளங்கும் திருவடிமலர்கள் எம்மைப் பாதுகாக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் எப்பொருட்கும் முடிவாக விளங்கும் செந்தளிர் போன்ற திருவடிகள் எம்மைப் பாதுகாக்க வேண்டும். எல்லாவுயிர்களுக்கும் தோற்றமாக விளங்குகின்ற பொன் போன்ற பாதங்கள் எம்மைப் பாதுகாக்க வேண்டும். எல்லா உயிர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகங்களை ஊட்டிக் காக்கின்ற பூங்கழல்கள் எம்மைப் பாதுகாக்க வேண்டும். எல்லா உயிர்களுக்கும் இறுதியைச் செய்கின்ற இரண்டு திருவடிகளும் எம்மைப் பாதுகாக்க வேண்டும். திருமாலும் நான்முகனும் காணாத நினது திருவடித்தாமரை மலர்கள் எம்மைப் பாதுகாக்க வேண்டும். யாம் ஆடுகின்ற மார்கழி நீராடலாலும் எம்மைப் பாதுகாத்தருள வேண்டும்.

இந்த வேண்டுகோளின் மூலம் இரண்டு வழிபாட்டு மரபுகள் பேணப்பட்டுள்ளன. ஒன்று இறைவன் திருவடியை வழிபடும் மரபு. மற்றது மார்கழி நோன்பு பேணல்மரபு. மணிவாசகர் சிவன் திருவடி வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடும் நம்பிக்கையும் கொண்டவர். இப் பாடலில் இறைவனுடைய ஐந்தொழில்களும் குறிப்பிடப் பட்டுள்ளதாக உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளனர். அவ்விளக்கம் வருமாறு:

"எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம் என்பதனால்
படைத்தலும் எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்
என்பதனால் காத்தலும் எல்லாவுயிர்க்கும் ஈறாமிணையடிகள்
என்பதனால் அழித்தலும் மால் நான்முகனும் காணாத
புண்டரிகம் என்பதனால் மறைத்தலும் யாமுய்யக்
கொண்டருளும் பொன் மலர்கள் என்பதனால் அருளலும்
ஆகிய இறைவனது ஐந்தொழில்களும் குறிப்பிடப்பட்டன."

(சு. அருளம்பலனார்)

பாவை நோன்பு பற்றியும் அவர் வருமாறு விளக்கியுள்ளார்.

"பாவை நோன்பு நோற்கும் மகளிர் புலரிக்காலத்து எழுந்து
நீராடி நியதி முடித்துப் பாவை உருவில் பார்வதிதேவியை
வழிபட்டுத்தாம் விரும்பிய பேற்றைப் பெறுவாராகலின்
அந்நோன்பிற்கு அங்கமாக ஆடும் தூய நீராட்டு அவ்
வழிபாட்டுக்கு இன்றியமையாததாகலின் 'யாம் ஆடுதும்
மார்கழி நீர் போற்றி' என அதனையே விதந்தெடுத்துக்
கூறி எங்களைப் பாதுகாத்தருளுக எனக் கூறினரா
யினும் பாவை நோன்பு எங்களைப் பாதுகாத்து
அருள்க என்பதே கருத்தாகக் கொள்க"

(சு. அருளம்பலனார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவை நோன்பு இன்று 'திருவெம்பாவை விரதம்' என்றழைக் கப்படுகிறது. பெண்களால் மட்டுமன்றி ஆண்களாலும் அநுட்டிக்கப் படுகிறது. மழையை வேண்டி நோன்பிருத்தல் என்ற செயற்பாட்டினால் ஆண், பெண் இருபாலாரும் அநுட்டிக்கும் நோன்பாக மாறியுள்ளது எனலாம்.

எனினும் திருவெம்பாடலில் உள்ள பெண்விளிச் சொற்கள் இந்நோன்பு நடைமுறையைப் பெண்களே சிறப்பாகச் செய்வதை நன்கு உணர்த்தி நிற்கின்றன. அவை வருமாறு:

பாடல் :1 வாள் தடங்கண் மாதே
பாடல் :2 நேரிழையாய், நேரிழையீர்
பாடல் :3 முத்தன்ன வெண்ணகையாய்
பாடல் :4 ஒண்ணித்தில நகையாய், வண்ணக்கிளி மொழியார்
பாடல் :5 பாலூறு தேன்வாய்ப்படிறீ, ஏலக்குழலீ
பாடல் :6 மானே
பாடல் :7 வன்னெஞ்சப் பேதை
பாடல் :15 வாருருவப் பூண்முலையீர்
பாடல் :18 பெண்ணே

| | பதிகப் பெயர், பாடப்பட்ட இடம் | பாடல்களின் தொகை |
|---|---|---|
| 1. | திருவம்மானை, திருவண்ணாமலை | இருபது பாடல்கள் |
| 2. | திருப்பொற்சுண்ணம், தில்லை | இருபது பாடல்கள் |
| 3. | திருக்கோத்தும்பி, தில்லை | இருபது பாடல்கள் |
| 4. | திருத்தெள்ளேணம், தில்லை | இருபது பாடல்கள் |
| 5. | திருச்சாழல், தில்லை | இருபது பாடல்கள் |
| 6. | திருப்பூவல்லி, தில்லை | இருபது பாடல்கள் |
| 7. | திருவுந்தியார், தில்லை | இருபது பாடல்கள் |
| 8. | திருத்தோணோக்கம், தில்லை | பதினான்கு பாடல்கள் |
| 9. | திருப்பொன்னூசல், தில்லை | ஒன்பது பாடல்கள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவெம்பாவையில் இறைவனை விளிக்கும் சொற்களை விடக் 'கணவர்' என்னும் ஆண் விளிச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் திருப்பாவையில் இச்சொல் பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மணிவாசகருடைய திருவெம்பாவை இருபது பாடல்களாகக் கட்டமைக்கப்பட்டிருப்பதற்கு ஏதாவது காரணம் இருக்கலாமோ என எண்ணும் போது அவர் பாடிய ஏனைய மகளிர் வாழ்வியல் தொடர்பான பாடல்களையும் ஒப்பிட்டு நோக்கவேண்டியுள்ளது. அவர் பாடிய பாடல்கள் தொகை வருமாறு அமைந்துள்ளது.

இவற்றை நோக்கும் போது திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல் என்னும் இருபதிகங்களைத் தவிர ஏனையவை 20 பாடல்களாகவே கட்டமைக்கப்பட்டுள்ளன. இறைவன் புகழ்பாட மகளிர் நடைமுறைகளைப் பயன்படுத்த எண்ணிய மணிவாசகர் பாடல்களின் தொகையை 20 என வரையறை செய்து பாடியுள்ளமை தெளிவாக விளங்குகிறது.

**இருபாவைப் பாடல்களினதும் ஒருமைப்பாடு**

ஆண்டாள் பாடிய திருப்பாவைக்கும் மணிவாசகர் பாடிய திருவெம்பாவைப் பாடல்களுக்கும் ஒருமைப்பாடுகள் நிறைய உள்ளன. அவற்றை வருமாறு தொகுத்துக்காட்டலாம்.

1. மார்கழி நீராடல் நடைமுறை பற்றிப் பாடுவது.

சான்றாகப் பின்வரும் பாடலடிகள் அமைகின்றன.

'மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்'
(திருப்பாவை : 4)

போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்'
(திருவெம்பாவை : 20)

2. பெண்களைத் துயிலெழுப்பப்பாடுதல்

'பிள்ளாய் எழுந்திராய் (திருப்பாவை : 4) } திருப்பாவை:20
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ
(திருப்பாவை : 7)

பாவாய் எழுந்திராய் (திருப்பாவை : 8)
மாமீர் அவளை யெழுப்பீரோ (திருப்பாவை : 9)
பள்ளிக்கிடத்தியோ பாவாய் (திருப்பாவை :13)
நங்காய் எழுந்திராய் (திருப்பாவை :14)
இளங்கிளியே இன்னம் உறங்குதியோ (திருப்பாவை : 15)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
(திருப்பாவை :16)

உம்பர் கோமானே உறங்காதெழுந்திராய் (திருப்பாவை :17)
கப்பம் தவிர்க்கும் கலியே துயிலெழாய்
வெப்பம் கொடுக்கும் விமலா துயிலெழாய்

நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய்
தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய் (திருப்பாவை : 21)
மாதே வளருதியோ (திருவெம்பாவை : 1)
போதார் அமளிக்கே நேசமும் வைத்தனையோ
(திருவெம்பாவை : 2)
கண்ணைத் துயின் றவமே காலத்தைப் போக்காதே
(திருவெம்பாவை : 4)
இன்னம் புலர்ந்தின்றோ (திருவெம்பாவை : 6)
இன்னம் துயிலுதியோ (திருவெம்பாவை : 7)
வாழி யீ தென்ன உறக்கமோ (திருவெம்பாவை : 8)
எம்பெருமான் நந்தகோபா எழுந்திராய் (திருப்பாவை : 17)

3. நீராடுதலைக் காட்சிப்படுத்தல்

நீராடப் போதுமினோ நேரிழையீர் (திருப்பாவை : 1)
நாட்காலே நீராடி (திருப்பாவை : 2)
நம் பாவைக்குச் சாற்றி நீராடினால் (திருப்பாவை : 3)
நாங்களும் மார்கழி நீராட (திருப்பாவை : 4)
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே (திருப்பாவை : 13)
இப்போதே யெம்மை நீராட்டேல் (திருப்பாவை : 20)
மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான் (திருப்பாவை : 26)

4. துயில் நிலை

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபம் கமழத் துயிலணைமேல் கண்வளரும் (திருப்பாவை : 9)
குத்து விளக்கெரியக் கோட்டுக் காற்கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் கிடந்த மலர் மார்பா ..." (திருப்பாவை : 19)
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் (திருவெம்பாவை : 1)
வெவ்வேறாய் இன்னும் துயிலுதியோ (திருவெம்பாவை : 7)

5. விடிகாலைத் தோற்றம், ஒலியரவம்

புள்ளும் சிலம்பின் காண் (திருப்பாவை : 6)
கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத்தன் கலந்து
பேசின பேச்சரவம் (திருப்பாவை : 7)
ஓசைப்படுத்த தயிரரவம் (திருப்பாவை : 7)
கீழ்வானம் வெள்ளென்றல் (திருப்பாவை : 8)
பனித்தலை வீழநின் வாசற் கடை பற்றி (திருப்பாவை : 12)
புள்ளும் சிலம்பினகாண் (திருப்பாவை : 13)
செங்கழுநீர் வாய் நெகிழ்ந் தாம்பல்வாய் கூம்பின
(திருப்பாவை : 14)
வந்தெங்கும் கோழியழைத்தன
பல்கால் குயிலினங்கள் கூவின } (திருப்பாவை : 18)
சிற்றஞ்சிறுகாலே (திருப்பாவை : 29)
கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும் வெண்சங்கெங்கும் }
(திருவம்பாவை : 8)

6. மழைப்பொழிவு நிலை

சார்ங்க உதைத்த சரமழைபோல்
வாழ வுலகினிற் பெய்திடாய் (திருப்பாவை : 4)
முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையே.... (திருவெம்பாவை : 16)

7. மலர்க்காட்சி

பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண்படுப்ப
(திருப்பாவை : 3)
செங்கழுநீர் வாய் நெகிழ்ந் தாம்பல் வாய் கூம்பின
(திருப்பாவை : 14)
மாதவிப் பந்தல் (திருப்பாவை : 18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தாமரைக் கை (திருப்பாவை : 18)
தாமரைப் பூப்போலே செங்கண் (திருப்பாவை : 22)
பொற்றாமரையடி (திருப்பாவை : 29)
கூசும் மலர்ப்பாதம் (திருவெம்பாவை : 2)
பாதமலர் (திருவெம்பாவை : 10)
பூத்திகழும் பொய்கை (திருவெம்பாவை : 12)
பைங்குவளைக் கார் மலரால் செங்கமலப் பைம் போதால்
(திருவெம்பாவை : 13)
பங்கயப் பூம்புனல் (திருவெம்பாவை : 13)
செங்கமலப் பொற்பாதம் (திருவெம்பாவை : 17)
பாதமலர்
புண்டரிகம் } (திருவெம்பாவை : 20)
பொன்மலர்கள்

8. பெண்களின் தோற்றம்

ஏரார்ந்த கண்ணி யசோதை (திருப்பாவை : 1)
வாசநறுங்குழல் ஆய்ச்சியர் (திருப்பாவை : 7)
கோது கலமுடைய பாவாய் (திருப்பாவை : 8)
கோவலர் தம் பொற்கொடியே (திருப்பாவை : 11)
புற்றரவல்குல் புனமயிலே (திருப்பாவை : 11)
கந்தம் கமழும் குழலி (திருப்பாவை : 18)
பந்தார் விரலி (திருப்பாவை : 18)
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை (திருப்பாவை : 19)
மைத்தடங்கண்ணி (திருப்பாவை : 19)
செப்பன்ன மென்முலைச் செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை (திருப்பாவை : 20)
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் (திருப்பாவை : 30)
நேரிழையீர் (திருவெம்பாவை : 1)
முத்தன்ன வெண்ணகையாய் (திருவெம்பாவை : 3)
ஒண்ணித்தில நகையாய் (திருவெம்பாவை : 4)
பாலூறு தேன்வாய் (திருவெம்பாவை : 5)
ஏலக்குழலி (திருவெம்பாவை : 5)
மையார் தடங்கண் மடந்தை (திருவெம்பாவை : 11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| *வாருருவப்பூண் முலையீர்* | *(திருவெம்பாவை : )* |
| *கருங்குழலி* | *(திருவெம்பாவை : 17)* |

9. பெண்கள் பேச்சு நிலை

*வல்லையுன் கட்டுரைகள் பண்டே யுன் வாயறிதும்*
*(திருப்பாவை : 15)*

| | |
|---|---|
| *தித்திக்கப் பேசுவாய்* | *(திருவெம்பாவை : 3)* |
| *பொக்கங்கள் பேசும்* | *(திருவெம்பாவை : 5)* |
| *வார்த்தையும் பேசி* | *(திருவெம்பாவை : 12)* |
| *சீரொருகால் வாயோவாள்* | *(திருவெம்பாவை : 15)* |
| *ஒன்று உரைப்போம் கேள்* | *(திருவெம்பாவை : 19)* |

10. கோயில் பற்றிய குறிப்பு

| | |
|---|---|
| *புள்ளரையன் கோயில்* | *(திருப்பாவை : 6)* |
| *கோயில் காப்பானே* | *(திருப்பாவை : 16)* |
| *கோயிற் பிணாப்பிள்ளைகாள்* | *திருவெம்பாவை : 10)* |

11. கடை திறக்க வேண்டல்

| | |
|---|---|
| *மணிக்கதவம் தாள் திறவாய்* | *(திருப்பாவை : 9)* |
| *மணிக்கதவம் தாள் திறவாய்* | *(திருப்பாவை : 16)* |
| *கடை திறவாய்* | *(திருப்பாவை : 18* |
| *கடை திறவாய்* | *(திருவெம்பாவை : 3)* |
| *கடை திறவாய்* | *(திருவெம்பாவை : 5)* |

12. சங்கொலிப்பு

*செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தர்*
*தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்*
*(திருப்பாவை : 14)*
*இயம்பும் வெண் சங்கெங்கும் (திருவெம்பாவை : 8)*

இவற்றோடு இன்னும் பின்வரும் அமைப்பு நிலைகளும் இருவரது பாடல்களிலும் ஒருமைப்பட்டுள்ளன.

1. வழிபாட்டு நடைமுறைப்பதிவு
2. வழிபாட்டுறுதி கூறல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மழை வேண்டல்
4. வழிபாட்டு மரபுப் பதிவு
5. நாடக உத்திமுறைப் பயன்பாடு
6. இறைநாமம் கூறல்
7. அருட் செயல் பதிவு
8. கூட்டு வழிபாட்டு நிலை
9. அடியார்கள் நிலை கூறல்
10. அடி தொழுதல்
11. காலம் பற்றிய கணிப்பு
12. பாடலிறுதியில் ஏலோ ரெம்பாவாய் என்ற தொடரமைப்பு

இவை பற்றி முன்னரே விளக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பாடல்களின் வேறுபட்ட நிலை**

திருப்பாவை திருவெம்பாவை என்னுமிரு பாவைப் பாடல்களிலும் சில வேறுபட்ட நிலைகளைக் காணலாம். திருப்பாவை பெண் மொழியில் பாடப்பட்டுள்ளது. திருவெம்பாவை பெண்ணாகப் பாவனை செய்த ஆண் மொழியிலே பாடப்பட்டுள்ளது. ஆண்டாள் கண்ணன் அருளைப் பாட பாவைப் பாடலமைப்பைக் கையாண்டுள்ளாள். மணிவாசகர் சிவனுடைய அருள் திறத்தைப் பாடப் பாவைப் பாடலமைப்பைக் கையாண்டுள்ளார். பாடல்களின் தொகையிலும் வேறுபாடு இருப்பது முன்னர் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வேறுபாட்டு நிலையில் குறிப்பிடத்தக்க இன்னொரு அமைப்பு நீர்நிலைபற்றிய விளக்கமாகும். திருப்பாவைப் பாடலில் நீராடல் பற்றிக் குறிப்பிடப்படுகின்றதேயன்றி நீர்நிலைபற்றிய விளக்கம் எதுவும் இடம்பெறவில்லை,. ஆனால் திருவெம்பாவையில் நீர் நிலை பற்றிய விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. அவை வருமாறு அமைந்துள்ளன.

| | |
|---|---|
| மொய்யார் தடம் பொய்கை | *(பாடல் : 11)* |
| பூத்திகழும் பொய்கை | *(பாடல் : 12)* |
| பொங்கு மடு | *(பாடல் : 13)* |
| ஏருருவப் பூம்புனல் | *(பாடல் : 15)* |
| பங்கயப் பூம்புனல் | *(பாடல் : 17)* |
| பூம்புனல் | *(பாடல் : 18)* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ போன்று திருப்பாவையில் மார்கழி நீராடல் செய்து வழிபடுவதன் நோக்கம் பறை பெறுதல் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. அக்குறிப்பு வருமாறு அமைந்துள்ளது.

நாராயணனே நமக்கே பறைதருவான் (பாடல் : 11)

போற்றப் பறை தரும் புண்ணியனால் (பாடல் : 10)

அறை பறை மாயன் மணிவண்ணன் நென்னலே
வாய்நேர்ந்தான் (பாடல் : 16)

என்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான் (பாடல் : 24)

அருத்தி வந்தோம் பறை தருதியாகில் (பாடல் : 25)

சாலப் பெரும்பறையே பல்லாண்டிசைப் பாரே (பாடல் : 26)

பாடிப்பறை கொண்டு யாம் பெறுசம்மானம் (பாடல் : 27)

இறைவா நீ தாராய் பறையே (பாடல் : 28)

இற்றைப் பறை கொள்வானன்று காண் கோவிந்தா (பாடல் : 29)

இவ்வாறு பறை கேட்பது ஒரு வேறு பட்ட அமைப்பாக ஆண்டாள் கண்ணனிடம் புதியதொரு வழிபாட்டு உரிமையை வேண்டி நிற்பதாக உள்ளது. திருவெம்பாவைப் பாடலில் இறைவன் பாதமலர் வேண்டுதல் நடை பெறுகிறது.

'மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்' (பாடல் : 2)

'பொற்பாதம் ஏத்தி இருஞ்சுனை நீராடல்' (பாடல் : 12)

'பெய்வளைதன் பாதத்திறம் பாடி' (பாடல் : 14)

அமுதமாய் நின்றான் கழல் பாடி' (பாடல் : 18)

திருவெம்பாவை நிறைவுப் பாடல் பாதமலரை வேண்டும் பாடலாக அமைந்துள்ளது.

இரு பாவைப் பாடல்களும் இருவகைப்பட்ட வழிபாட்டு நடைமுறைகளை மேற்கொண்ட நிலையை விளக்கமுயன்றாலும் பாவை நோன்பை ஒரு பொது வழிபாட்டு நடைமுறையாகப் பதிவு செய்துள்ளன. ஆண்டாள் பாடல்களில் பெண்மை உணர்வுநிலை இயற்கையாக அமைந்துள்ளது. அவள் வளர்ந்த சூழல் அவளை ஒரு வழிபாட்டுப் பயிற்சியை அளிக்கவல்லவளாக உருவாக்கியுள்ளது. தன் உள்ளத்தில் கணவனாக கண்ணனை அடைய வேண்டுமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணியதை 'நாச்சியார் திருமொழி' என்னும் பாடல் தொகுப்பிலே உணர்வு பூர்வமாகவே வெளிப்படுத்தியுள்ளாள். உண்மையில் கண்ணனை உறுதியாக வழிபட்டு அவனுடைய மெய்யடியாராகப் பெண்கள் வாழ வேண்டுமென்ற இலக்குடனேயே திருப்பாவைப் பாடல்களைப் பாடியுள்ளாள்.

ஆனால் மணிவாசகர் தனது இறை அநுபவத்தை வெளிப்படுத்த பாவைப் பாடல்களைப் பாடி உள்ளார். அடியாரை வழிநடத்த தன்னைப் பெண்ணாகப் பாவனை செய்து பாடியுள்ளார். திருபெருந் துறையிலே திருவடி தீட்சை தந்த இறைவனை அவர் மீண்டும் காண விரும்புவதையே திருவெம்பாவைப் பாடலின் உட்பொருளாக அமைத்துள்ளார். இதனால் மணிவாசகர் பாடல்களுக்கு இறைதத்துவ விளக்கங்களும் கொடுக்கப்படுகின்றன. திருவண்ணாமலையிலே அவர் சக்தியை வியந்து பாடிய பாடல்களே திருவெம்பாவைப் பாடல் எனக்கூறுவார்.

**புதியதொரு பக்தி மரபு**

திருப்பாவையும் திருவெம்பாவையும் ஒரு புதிய பக்திமரபைத் தொடக்கி வைத்துள்ளன. பண்டைய தமிழ் இலக்கியங்களால் மழையை வேண்டி வழிபாடு செய்யும் மரபு முன்னர் இருந்ததை அறிய முடிகிறது. பின்வரும் பாடலடிகளை அதற்குச் சான்றாகக் காட்டலாம்.

"மலை வான் கொள்க என உயர்பலி தூ உய்
மாரி ஆன்று மழைமேக்கு உயர்க எனக்
கடவுட் பேணிய குறவர் மாக்கள்
பெயல் கண் மாறிய உவகையர் சாரல்
புனத்தினை அயிலும் நாட......" (புறநானூறு)

மலைப் பிரதேசத்திலே மழை பொழியவில்லை. அதனால் அங்கு வாழும் குறவர்கள் ஒரு வழிபாடு மனமுவந்து செய்கிறார்கள் மாரி பொழிய வேண்டும். மழை மேகங்கள் விரைந்து வரவேண்டும். என உயர்ந்த பலிகளைத் தூவி கடவுளை மனங்கசிந்து வழிபாடு செய்கின்றனர். அவர்கள் வழிபாட்டால் மழை பொழிகிறது. தினைப்புனம் செழித்து வளர்ந்தது. அவர்கள் மகிழ்வாகத் தினையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவாக்க முடிந்தது. இவ்வாறு மழைவேண்டி வழிபடும் மரபு ஒரு மக்களிடையே இருந்தது.

ஆனால் அந்த மரபை ஆண்டாளும் மணிவாசகரும் ஒரு புதிய பக்திமரபாகப் பேண வழிகாட்டியுள்ளனர். பெண்களின் சிறப்பு வழிபாட்டு நடைமுறையாகத் தொடர வைத்துள்ளனர். மார்கழி நீராடல் செய்து வழிபட்டால்

"தீங்கின்றி நாடெல்லாம் திங்களும் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெ லூடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண்படுப்ப

என ஆண்டாள் மழைவளம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தினையை உணவாகக் கொண்டு வாழ்ந்த காலம் கடந்து நெல்லரிசியை உணவாகக் கொண்டு வாழும் காலத்தில் இவ்வழிபாடு இன்றியமையாதது என ஆண்டாள் எண்ணினாள். ஒவ்வொரு திங்களும் மாரி மும்முறை கொடை தரும் என மழையின் உயர்ந்த நிலையைக் குறிப்பிட்டுள்ளாள். மழையால் மனிதர் மட்டுமன்றி ஏனைய உயிரினங்களும் மகிழ்வோடு வாழும். செந்நெல் வயல்களிலே நீர்வளம் நிறைந்தால் அங்கு வாழும் கயல் மீன் மகிழ்வாக இருக்கும். குவளை மலர்கள் நீர் வளத்தால் மலர்ந்து நிற்கும். அவற்றிலே உள்ள தேனைப் பொறிகளையுடைய வண்டுகள் வயிறார உண்டு மகிழ்வாக அந்த மலரிலே உறங்கும். இத்தகைய ஏனைய ஊர்வன பறப்பன போன்ற உயிரினங்களும் மகிழ்வாக வாழ்வு நடத்துவதற்கு மழை இன்றியமையாதது. மழைவளம் பசுக்களின் வளத்திற்கும் இன்றியமையாதது. அக்காலத்தில் பசு பெரும் செல்வமாக மதிக்கப்பட்டது. பசுவின் பால் நிறைவுணவு என்று இன்று அறிவுறுத்தப்படுகிறது. ஆண்டாள் கண்ணன் வளர்ந்த ஆயர்பாடியின் பசுக்களை எண்ணுகிறாள். 'வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளற் பசுக்கள்' என அவற்றின் கொடையைக் குறிப்பிடுகிறாள். பசுவின் பால், வெண்ணெய், நெய், மோர் என நான்கு பயன்களை மக்கள் பெறுகின்றனர். அந்தப் பயன்களை அவர்கள் பெறுவதற்கு பசுவின் உணவு நிறைவாகக் கிடைக்க வேண்டும். அதற்கு நீர்வளம் தேவை. இன்னும் பசுவின் பயனைத் தமது செயற்பாட்டால் பெண்கள் பெற்று எல்லோருக்கும் வழங்குகின்றனர். எனவே பெண்கள் தங்கள் கடமையைச் செய்வதற்கும் மழையை வேண்டி வழிபாடு செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என ஆண்டாள் உணர்த்தியுள்ளாள். எனவே எல்லா உயிரினங்களும் மகிழ்வாக வாழ்வதற்கு 'உலகினில் பெய்திடாய்' எனப் பெண்களை ஒரு புதிய வழிபாட்டைச் செய்ய ஆற்றுப்படுத்தியுள்ளாள். இந்த வழிபாட்டு நடைமுறை இன்று வரையும் பெண்களால் தொடரப்படுகிறது.

மணிவாசகர் இறைவியின் இன்னருளே மழையென என வழிபடுமாறு ஆற்றுப்படுத்துகிறார். பெண்களே இவ்வழிபாட்டை முன்னெடுக்க வல்லவர் என்பதையும் அவர் உணர்ந்து திருவெம் பாடலில் அவ்வழிபாட்டு நடைமுறைகளைப் பதிவு செய்து உள்ளார். அவர் பாடல்களில் மார்கழி நீராடல் இறைவன் புகழ்பாட ஏற்ற நடைமுறையாகப் பெண்களால் செய்யப்படுவது என ஒரு புதிய மரபாக விளக்கப்பட்டுள்ளது. இன்னும் இந்த வழிபாடு பத்து நாட்கள் நடைபெறுவதாக இன்று செயற்பாட்டில் உள்ளது. மணிவாசகர் மார்கழி நோன்பிற்குரிய நடைமுறைகளைப் பாடல்களிலே குறிப்பிடவில்லை. ஆனால் இறைவனைப் பாடி வழிபட மார்கழி நீராடலை ஓர் உத்திமுறையாகப் பயன்படுத்தி ஒரு புதிய வழிபாட்டு நடைமுறையை ஆண்டாள் போலச் சைவத்திற்கும் தொடக்கிவைத்துள்ளார். மேலும் இருவரும் பெண்களை இவ்வழிபாட்டு மரபைத் தொடர வைத்துள்ளனர். இறை வழிபாட்டு நடைமுறைகளில் ஆண்களே மெய்யடியார்கள் எனக் கருதப்பட்ட நிலையை ஆண்டாள் மாற்ற முயன்றாள். பெண்களின் மரபான வழிபாட்டுப் பயிற்சியை மேலும் ஆற்றலுடையதாக ஆற்றுவதற்குக் கூட்டு வழிபாட்டு நடைமுறை ஒன்றை உருவாக்கினாள். குறிப்பாக இளம் பெண்கள் மார்கழி மாதத்திலே விடியற்காலையில் துயில் எழ வேண்டும். தம்மோடொத்த இளந் தோழியரையும் துயில் எழுப்பி கூட்டாகச் சென்று நீராடும் நாளாந்தச் செயற்பாடு ஒன்றைப் புதிய மரபாக்க வழிபாட்டு மரபாக்கவே திருப்பாடல்களைப் பாடியுள்ளாள். ஆனால் அந்த வழிபாட்டு நடையை வாழ்வியலோடு முரண்படாத வண்ணம் பாடல்களில் நெறிப்படுத்தியுள்ளாள். பெண்கள் நீராடும் போது ஒரு இறை எண்ணத்தோடு மனதை அலைபாய விடாது இருக்க வழி கூறியுள்ளாள். பண்டைய இலக்கியமான பரிபாடலில் பெண்கள் நீராடும் காட்சி விளக்கப்பட்டுள்ளது. அது வருமாறு அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பனிப் படு பைதல விதலைப் பருவத்து
ஞாயிறு காயா நளி மாரிப் பின் குளத்து
மா இருந் திங்கள் மறு நிறை ஆதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்க
புரிநூல் அந்தணர் பொலம் கலம் ஏற்ப
வெம்பதாக வியல் நில வரைப்பு என
அம்பா ஆடலின் ஆய்தொடிக்கன்னியர்
முனித்துறை முதல்வியர் முறைமை காட்ட
பனிப்புலர்வு ஆடி பரு மணல் அருவியின்
ஊதை ஊர்தர உறை சிறை வேதியர்
நெறி நிமிர் நுடங்கு அழல் பேணிய சிறப்பின்
தையல் மகளிர் ஈர் அணி புலர்தர
வையை நினக்கு மடை வாய்த்தன்று
மையாடல் ஆடல் மழ புலவர் மாறு எழுந்து
பொய் ஆடல் ஆடும் புணர்ப்பின் அவர் அவர்
தீ எரிப்பாலும் செறி தவம் முன்பற்றியோ
தாய் அருகா நின்று தவத்தைந் நீராடுதல்
நீ உரைத்தி வையை நதி" (பரிபாடல் : 11 : 75 - 92)

*பனி மிகுதியாகப் பெய்யும் பருவகாலம், ஞாயிற்றின் கதிர்கள் எறிக்காத காலம். குளிர்ந்த மழை பெய்யும் காலம். பெரிய திங்களின் நிறைநாளாகிய ஆதிரை நாளிலே முப்புரி நூலணிந்த அந்தணர்கள் விழா தொடங்குவதற்கு நூலறிந்த அந்தணர் நெறிப்படுத்துகின்றனர். பொற்கலம் ஏந்தி குளிர்ந் நிலப்பரப்பு ஆக என அம்பா ஆடல் செய்யும் கன்னியர் வந்துள்ளனர். வழிபாட்டு முறைமையறிந்த முதுமகளிர் நெறிப்படுத்த பனிவிழும் புலரிக்காலத்தில் நீராடி மணல் நிறைந்த ஊதைக்காற்று வீசும் கரையிலே வேதியர் நெறிப்படப் பேணிய சிவந்த நெருப்பின் வெம்மையிலே தமது கூந்தலை ஈரம் புலர்த்திய பின் வையைக்கு மடை பரவினர். இந்த நீராடல் செய்கின்றதையே தாய் அருகா நின்று தவத்தை நீராடல் என்று கூறுவரோ? எனவையையிடம் கேட்பதாக அமைந்த இப்பாடல் வரிகள் மார்கழி மாதம் திருவாதிரை நாள் வழிபாடு பற்றிச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளன.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாடலில் நீராடுகின்ற கன்னியரை முதிய பெண் நெறிப்படுத்தும் முறைமை கூறப்பட்டுள்ளது. இந்த முறைமையையே மணிவாசகர் திருவெம்பாவைப் பாடலிலும் ஆண்டாள் திருப்பாவையிலும் புதிய மரபாகப் பாவைப் பாடலாகப் பாடியுள்ளனர். மணிவாசகர் திருவாதிரை நாளை நிறைவு நாளாக அமைத்து வழிபட்ட மரபையே பின்பற்றி திருவெம்பாவைப் பாடல்களை சிவன் வழிபாட்டில் பயன்படுத்தியுள்ளார். ஆனால் ஆண்டாள் அந்த மரபை மார்கழி மாதம் முழுவதும் திருமாலை வழிபடும் நடைமுறையாகப் பாடியுள்ளாள்.

எனவே அம்பா ஆடல் என்ற வழிபாட்டு நடைமுறையே மார்கழி நீராடல் என மாற்றமுற்றுப் புதிய பெண்களின் வழிபாட்டு நடைமுறையாகப் பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. முது மகளிர் ஆற்றுப்படுத்தல் நிலையை மாற்றி ஆண்டாள் இளம் பெண்களையே வழிபாட்டுக்கு ஆற்றுப்படுத்த முனைகிறாள். திருப்பாவையிலே வருகின்ற 'நாயகப் பெண்பிள்ளாய்' என்ற தொடர் இதனை நன்கு விளக்கி நிற்கிறது. தலைவியாக ஒரு பெண் ஆற்றுப்படுத்த வேண்டும். ஆண்டாளின் திருப்பாவை பெண்களின் உறக்கநிலையை மாற்றி அவர்களை செயற்பாட்டாற்றல் பெறத் தூண்டும். மணிவாசகர் பாடல் பெண்கள் கூட்டாகத் திருக்கோயில் வழிபாடு செய்ய நெறிப்படுத்துகிறது. பக்தி நெறி எனத் தேவாரங்களும் திவ்வியப் பிரபந்தங்களும் காட்டிய நெறியைத் திருப்பாவையும் திருவெம்பாவையும் புதியதொரு மரபைத் தொடக்கி வைத்தமையால் அது இன்று வரையும் தொடர்கிறது. இன்னும் அடியார் என்ற சிறப்பான பெயரை ஆண்களுக்கே வழங்குவது மரபாக இருந்தது அந்த மரபை மேலும் தொடராமல் பெண்களும் அடியாராகத் தொண்டு செய்யலாமென ஆண்டாளும் மணிவாசகரும் உலகிற்கு உணர்த்தியுள்ளனர். இறையன்பர்களில் ஆண், பெண் என்ற வேறுபாடு இருப்பது தவறாகும். ஆனால் இறைவழிபாடு குழந்தை நிலையில் தாய்மூலம் அறியப்படுவதால் பெண் தனித்துவமானவள் என்பதையும் எல்லோரும் உணர வேண்டும். மேலும் வழிபாடு என்பது உயர்ந்த ஒரு தத்துவ நெறியெனப் பலரும் எண்ணுகின்றனர். ஆனால் வழிபாடு என்பது இறை நம்பிக்கையை 'உள்ளத்தில் ஏற்படுத்தும் ஒரு செயற்பாடாகும். இதற்கு வேதம் அறிந்து ஓமம் வளர்த்துக் கிரியைகள் செய்ய வேண்டியதில்லை. ஆண்டாள் பாடிய திருப்பாவையில் வையத்தில் வாழும் அனைவருக்கும் ஏற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறைமையைக் காட்டியுள்ளாள். அதைப் பின்வரும் பாடல் தெளிவாக எடுத்துரைத்துள்ளது.

"வையத்து வாழ்வீர்கள் நாமும் நம் பாவைக்கு
செய்யும் கிரிகைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடி பாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி யுகந்தேலோ ரெம்பாவாய்"

(திருப்பாவை : 2)

இப்பாடலில் அடியவராக இருந்து செய்யும் நடைமுறைகளையே ஆண்டாள் நிரற்படுத்திக் கூறியுள்ளாள். இறைவனுடைய திருவடியை நினைந்து எந்தச் செயலையும் செய்யவேண்டும். இறைவன் திருவடி பற்றிய நினைப்பைத் தொடர்வதற்கு எமது உடலின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்த வேண்டும். நாவின் சுவையைக் கட்டுப்படுத்த வேண்டும். உடலை ஒப்பனை செய்யும் ஆசையைக் கட்டுப்படுத்த வேண்டும். தீயசொற்களையும் தீய செயற்பாடுகளையும் நிறுத்தி விட வேண்டும். பிறருக்கு உணவிடும் கொடையைப் பேணவேண்டும். இவைதான் நாம் செய்யவேண்டிய கிரியைகள் என ஆண்டாள் பெண்களுக்கு ஏற்றதொரு வழிபாட்டு நடையாகக் கூறிய விடயங்கள் எல்லோருக்கும் ஏற்றவையே. கோயிற் கிரியைகளிலே பங்குகொள்ளும் உரிமை பெண்களுக்கு வழங்கப்படாத போது ஆண்டாள் பெண்களுக்கு ஏற்ற கிரியை முறை ஒன்றை வகுத்துள்ளான். வாயினாற் பாடும்பணியைப் பெண்கள் செய்ய வேண்டும் என வலியுறுத்துகிறாள். தனக்கு முன்னே இறைவனைப் பாடிப் பரவியவரை நினைந்து பெண்களும் பாட வேண்டும் என எண்ணினாள். திருப்பாவைப் பாடல்களிலே இக்கருத்து வருமாறு பதிவாகியுள்ளது.

| | |
|---|---|
| *பையத்துயின்ற பரமன் அடிபாடி* | *(பாடல் : 2)* |
| *உலகளந்த உத்தமன் பேர்பாடி* | *(பாடல் : 3)* |
| *தாமோதரனை ... வாயினாற் பாடி* | *(பாடல் : 5)* |
| *கேசவனைப் பாடவும்* | *(பாடல் : 7)* |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிப் பறை கொண்டு (பாடல் : 8)
முகில் வண்ணன் பேர் பாட (பாடல் : 11)
மனத்துக்கினியானைப் பாட (பாடல் : 12)
கீர்த்திமை பாடி (பாடல் : 13)
மைத்துனன் பேர் பாட (பாடல் : 18)

பெண்கள் திருமாலைப் பாடும் அடியவராக மாறவேண்டும். திருமாலைப் பாடிய அடியவர்களில் ஆண்டாள் ஒருத்தி மட்டுமே பெண்ணாவாள். எனவே அவள் பரமனைப் பாடப் பெண்களும் முன்வரவேண்டுமென்று எண்ணுகிறாள். திருமாலின் அருள்திறம் பற்றி அறிந்திருந்தால் மட்டும் போதாது. அவற்றைப் பாடி எல்லோரும் அறியச் செய்ய வேண்டும் என்பதும் ஆண்டாளுடைய நோக்கமாக இருந்தது.

இதேபோலே மணிவாசகரும் பெண்களை இறைவன் புகழ்பாட வைத்துள்ளார். திருவெம்பாவைப் பாடலிலுள்ள பின்வரும் அடிகள் அதற்குச் சான்றாக உள்ளன.

அரும் பெரும் சோதியை யாம் பாட (பாடல் : 1)
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை (பாடல் : 3)
கண்ணுக்கினியானைப் பாடி (பாடல் : 4)
கோதாட்டும் சீலமும் பாடி (பாடல் : 5)
வான்வார் கழல் பாடி (பாடல் : 6)
கேழில் விழுப்பொருள் பாடினோம் (பாடல் : 8)
சிற்றம்பலம் பாடி (பாடல் : 14)
வேதப் பொருள் பாடி அப்பொருளாமா பாடி (பாடல் : 14)
கொன்றைத் தார் பாடி (பாடல் : 14)
ஆதித்திறம்பாடி அந்தமா பாடி (பாடல் : 14)
வாயார நாம் பாடி (பாடல் : 15)
நங்கள் பெருமானைப் பாடி (பாடல் : 17)
அமுதமாய் நின்றான் கழல் பாடி (பாடல் : 18)

இவ்வாறு இருவரும் பெண்களைப் பாடத்தூண்டியதும் ஒரு புதிய மரபை உருவாக்கும் முயற்சியாக உள்ளது. சைவ சமய அடியார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிய பாடல்கள் யாவும் பிற்காலத்தில் பன்னிரு திருமுறைகளாக வகுத்துத் தொகுக்கப்பட்டுள்ளன. அத்தொகுப்பிலே ஒரேயொரு பெண்ணடியாரின் பாடல்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. காரைக்காலம்மையார் பாடிய பாடல்கள் பதினோராந் திருமுறையிலே அடக்கப்பட்டுள்ளன. அவர் ஒரு வணிக குலத்துக் குடும்பப் பெண். சிவனருளில் அசையாத நம்பிக்கை கொண்டவர். சிவனை நேரிலே காணும் பெரும்பேறு பெற்றவர். அவர்பாடிய பாடல்களின் பொருளும் செய்யுள் அமைப்புமே பின் வந்த மெய்யடியார்கள் இறைவனைப் பாடும் பாடல்களைப் பாட வழிகாட்டியாய் இருந்தன. ஆனால் அவருக்குப் பின்பு இறைவன் புகழ்பாடிய பெண்ணடியாரைக் காணமுடியவில்லை. எனவே மணிவாசகர் விளையாட்டுநிலையிலே பாடித்திரியும் இளம் பெண்களை இறை புகழ்பாட ஆற்றுப்படுத்தி உள்ளார். பெண்ணடியார்கள் உருவாக வழிகாட்டியுள்ளார்.

இதேபோன்று வைணவ அடியார்கள் பாடிய பாடல்கள் நாலாயிரந் திவ்வியப் பிரபந்தம் எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அத் தொகுப்பிலே ஆண்டாள் பாடல்கள் மட்டுமே பெண்ணடியார் பாடலாக உள்ளன. எனவே வைணவப் பெண்கள் பலர் கண்ணன் புகழ் பாடவேண்டும் என ஆண்டாள் ஒரு புதிய மரபைக் காட்டத் திருப்பாவையைப் பாடியுள்ளாள். பெண்கள் வழிபாட்டு நடைமுறைகளைப் பேணுவது மட்டுமன்றி அவற்றைப் பதிவு செய்து வைக்கவும் வேண்டும் என்பதும் இருவருடைய நோக்கமாக இருந்துள்ளது. வாய்மொழி மரபாக இறை புகழ் பாடப்பட்டதால் இது ஒரு கூட்டுப் பாடல் வழிபாட்டு நடைமுறையாகவும் பேணப்பட வழிவகுக்கப்பட்டுள்ளது.

இத்தகைய புதிய மரபின் தோற்றத்திற்கு இன்னொரு காரணத்தையும் ஊகிக்க முடிகிறது. குறிப்பாக மணிவாசகர் காலத்தில் பிறமதப்பரப்பல் இருந்ததால் அதைத் தடுப்பதற்குப் பெண்களை வழிபாட்டில் நம்பிக்கை உள்ளவராகப் பயிற்றிவிட வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறது. அதனைச் செயற்படுத்துவதற்கு மார்கழி மாதம் விடிகாலையில் எழுந்து துயிலெழும்பி எல்லோரும் இறைவன் புகழைப் பாடி நீராடி வழிபாடு செய்தல் என்ற புதிய மரபைக் கையாண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்குச் சான்றாக அவர் பாடிய திருச்சாழல் என்னும் பதிகம் உள்ளது. அப்பதிகத்திலே உள்ள இருபது பாடல்களிலும் இறை வழிபாடு பற்றிய பிறமதத்தவருடைய ஐயங்களை இரு பெண்கள் உரையாடித் தீர்ப்பதாக அமைந்துள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு பாடலைக் காட்டலாம்.

"மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகறியத் தீ வேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ."

(திருச்சாழல் : 13)

ஒரு பெண் கேட்கிறாள். என்னடி பெண்ணே மலையரசன் மாமகளும் பொன்னின் பாவை போன்றவளும் ஒளிபொருந்திய நெற்றியை உடையவளும் பெண்ணாகிய செல்வம் போன்றவளும் ஆகிய உமையம்மையை உன்னுடைய தலைவன் உலக மக்கள் அனைவரும் அறியுமாறு தீயினை வலம் வந்து திருமணம் செய்து கொண்டமைக்குரிய காரணந்தான் யாதோ? இக் கேள்விக்கு மற்றவள் மறுமொழி சொல்கிறாள். அருமைத்தோழியே அவ்வாறு அவன் தீயினை வலம் வந்து திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால் அனைத்துலகங்களிலும் உள்ள நூல்களில் கூறப்படும் பொருள்கள் எல்லாம் தத்தம் நிலைகளில் நிலைக்காமல் தடுமாறிவிடும் என்பதை நீயும் அறிவாய்.

எனவே ஆண்டாளும் மணிவாசகரும் தொலைநோக்கோடு ஒரு புதிய மரபைத் தொடக்கிவைத்ததை நன்குணர முடிகிறது. மெய்யடியார் நிலையைப் பெண்களும் அடைய வேண்டுமென ஆண்டாள் எண்ணிச் செயற்பட்டதற்கு அவளுடைய வாழ்வியற் சூழலும் ஒரு காரணமாக இருந்துள்ளது. அக்காலத்தில் திருக்கோயில் வழிபாட்டு நடைமுறைகளில் பெண்களின் பங்களிப்புக்கு இடம் கொடுக்கப்படவில்லைப் போலும் இதற்குப் பெரியாழ்வார் கண்ணனுக்குச் சாற்றும் மாலைகளைத் தானே கட்டிக் கொடுத்தமை சான்றாக உள்ளது. எனவே வழிபாட்டுப் பயிற்சி அளிக்க வல்லமை உள்ள பெண்கள் திருக்கோயில் வழிபாட்டு நடைமுறைகளிலும் பங்கு கொள்ள வேண்டும் என ஒரு புதிய மரபைத் தொடக்கவும் பாவைப்பாடல்கள் வழிகாட்டி நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பாவை வழிபாட்டைத் தொடர்தல்

ஆண்டாளும் மணிவாசகரும் அறிமுகம் செய்த புதிய வழிபாட்டு மரபான பாவை நோன்பின் தொடர்ச்சி இன்றுவரை நிலவுகிறது எனக் கூறுலாம். சைவ வைணவத் திருக்கோயில்களில் திருவெம்பாவையும் திருப்பாவையும் ஓதப்படுகின்றன. ஆனால் மார்கழி மாதத்தில் விடிகாலையில் பெண்கள் எழுந்து நீராடப் போகும் வழக்கம் கிராமப்புறங்களிலேயே வழக்கொழிந்துவிட்டது. எனவே 'மார்கழி நீராடல்' என்ற நடைமுறை பெண்களால் கைவிடப்பட்டுள்ளது. வைணவத் திருக்கோயில்களிலே மார்கழி மாதம் முழுவதும் திருப்பாவை ஓதலும் சைவத்திருக்கோயில்களிலே திருவெம்பாவைப் பாடல்கள் பத்து நாட்கள் ஓதப்படுவதும் தான் இப்போது எஞ்சிய நடைமுறைகளாக உள்ளன. சில கிராமப் புறங்களில் மட்டும் மார்கழி மாதத்தில் ஆண்கள் கூட்டாகச் சென்று வீதி வழியாகப் பாவைப் பாடல்களைப் பாடிச் செல்லும் வழக்கம் உள்ளது. இவ்வாறு பாடிச் செல்லும் ஆண்களைப் புதிய பெயரால் மார்கழிப்பண்டாரம் அல்லது சங்கூதிப்பண்டாரம் என அழைக்கின்றனர். சங்கொலித்துச் செல்வதால் சங்கூதிப்பண்டாரம் என்ற பெயர் வழங்கப்பட்டுள்ளது.

பண்டைய பெண்கள் விடியற்காலையில் எழுந்து பாடி நீராடச் செல்லும் நடைமுறை நாகரிக நகரமைப்பால் மாறிவிட்டது. பெண்கள் பொது இடத்தில் சென்று நீராடும் வழக்கம் இப்போதும் சில இடங்களில் இருப்பினும் விடியற்காலையிலே சென்று நீராடும் வழக்கம் அருகிவிட்டது. பொய்கை, மடு போன்ற நீர்நிலைகளும் தற்போது பேணப்படுவதில்லை. பெண்களின் வாழ்வியல் நடைமுறைகளும் பெரிதும் மாற்றமடைந்துள்ளன. மார்கழி நோன்பு அவசியந்தானா என்ற கேள்வியும் இளம்பெண்களிடையே தோன்றி உள்ளது. எனவே மார்கழி நோன்பு பற்றிய புதிய காலத்துக்கேற்ற விளக்கம் ஒன்று இன்று பெரிதும் வேண்டப்படுகிறது. இந்த மார்கழி நோன்பு இருநிலைகளிலே பேணப்படுவதற்கு வாய்ப்புண்டு. அவை வீட்டுநிலை எனவும் திருக்கோயில் நிலை என வகுக்கப்படும்.

### வீட்டு நிலை வழிபாடு

வீட்டுநிலையில் மார்கழி மாதம் இன்று தாயகத்தில் ஒரு சிறந்த மாதமாகக் கருதப்பட்டு வருகிறது. அந்த மாதம் முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுவாசலிலே மாக்கோலம் இழைத்து நடுவே சாணத்தின் மீது பூசனிப்பூவைச் சொருகும் வழக்கம் உண்டு. இதற்கான விளக்கம் வருமாறு கூறப்பட்டுள்ளது.

தரையிலே மாவினால் கோலம் போடுவதால் மழை காலத்தில் எறும்புகளுக்கான உணவுக்கொடையாக அது அமையும். சாணத்தின் மேல் பூசுணிப்பூவைச் சொருகுவது அந்தக் கோலத்தை ஒருவரும் மிதிக்கக்கூடாது என்ற அறிவுறுத்தலாகவே அமைகிறது. மேலும் கோலம் பெண்களின் கலைத்திறனையும் கைவண்ணத்தையும் காட்டி நிற்கிறது.

இன்று மாவினால் கோலம் போடும் மரபு வழக்கொழிந்து வருகின்றது. மாவிற்குப் பதிலாக வண்ணப்பொடிகள் பயன்படுத் தப்படுகின்றன. இதைவிட வண்ணமலர்களின் இதழ்களாலும் கோலம் போடப்படுகிறது. இக் கோலம் போடும் நடைமுறையோடு நோன்பிருக்கும் நடைமுறையும் பேணப்பட்டுவருகிறது. திருவெம்பாவை விரதமெனப் பத்துநாட்கள் பெண்கள் விரதமிருப்பர். ஆண்களும் இவ்விரதத்தைத் தற்போது அநுட்டிக்கின்றனர். எனவே பாவை நோன்பு பெண்களுக்குரிய நோன்பாக அன்றி எல்லோருக்கும் உரிய பொது நோன்பாக மாறிவிட்டது. வீட்டுநிலையில் ஆண்டாள் காலத்து நோன்பு நடைகளும் மாற்றம் பெற்றுள்ளன. ஆனால் நீராடித் தூய்மையாக இருக்க வேண்டும் என்ற நிலை இன்னமும் பேணப்படுகிறது. புலால் உணவு முற்றாகத் தவிர்க்கப்படுகிறது. ஒருவேளை உணவையாவது தவிர்க்கும் முறைமை உண்டு. வீட்டு நிலையில் மார்கழி நோன்பு வீட்டிலுள்ள அனைவரையும் இறைவனைப் பற்றி நினைக்க வைக்கிறது. குளிரான மாதம் என்ற நினைவை அப்புறப்படுத்தி இறைவனைப் பற்றிய நினைப்போடு காலத்தைக் கழிக்க வழிகாட்டுகிறது. வீட்டுநிலையிலே கூட்டுறவை ஏற்படுத்துகிறது. பகிர்ந்து உண்ணும் மனப்பக்குவத்தை வளர்க்கிறது. காலையில் எழுந்து கடமைகளைச் செய்ய ஒரு தூண்டுதலாகவும் விளங்குகிறது.

வீட்டுநிலையில் மழையை வேண்டிவழிபடும் மரபும் கிராமப் புறங்களிலே பேணப்படுகிறது. உழுது உண்போர் இதனைச் செயற் படுத்துகிறார்கள். ஆனால் இப்போது நீர்வளம் குறைவதால் அது பற்றிய நம்பிக்கை மக்களிடையே ஏற்பட்டு உள்ளது. குடிநீர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவைக்கான நீர்நிலைகள் நிரம்ப மழை பொழிய வேண்டும். கிணறு, குளம் வெயிற்காலத்திலும் நீர் அற்று வரண்டுவிடாமலிருக்கவும் வீட்டுவழிபாடு தொடர்கிறது.

**திருக்கோயில் நிலை**

பாவை நோன்பு திருக்கோயில்களில் ஒரு சிறப்பு வழிபாடாக நடைபெறுகிறது. வைணவ ஆலயங்களில் மார்கழி மாதம் முழுவதும் விடிகாலையில் திருப்பாவைப் பாடல்கள் பாடப்படும். நோன்பிருப்போர் நீராடி அங்கு சென்று திருமாலை வழிபடுவர். திருக்கோயிலில் மார்கழி உற்சவம் என வழிபாடு ஒரு சமூகத்தவர் வழிபாடாக நடக்கிறது. முப்பது நாட்களும் ஆண்டாள் பாடிய நாராயணனைப் பல்வேறு திருக்கோயில்களிலே கண்டு வழிபடுவதற்கு வாய்ப்பு உண்டு. ஆண்டாள் திருப்பாவையிலே காட்சிப்படுத்திய கோலங்களை நேரிலே கண்குளிரக் காணலாம். அந்தத் திருக்கோலங்கள் சிலவற்றை இங்கே எடுத்துக்காட்டலாம்.

"கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான் நாராயணன்"
"சீரிய சிங்காசனத்திருக்கும் கோலம்"
"குன்று குடையாய் எடுத்த கோலம்"

இதேபோன்று சைவ ஆலயங்களில் திருவெம்பாவை பத்து நாட்களும் சிறப்பான வழிபாடு நடைபெறும். சிவனின் திருக்கோல அழகை நேரில் கண்டு வழிபடலாம்.

இறைவன் திருவடிகளை நோக்கி வழிபாடு செய்வதற்கு திருக்கோயிலில் வாய்ப்புண்டு. 'ஆருத்திர தரிசனம்' என்ற சிறப்புத் தரிசனம் தில்லையிலே மிகவும் சிறப்பானது. திருக்கோயில்களுக்கு செல்லும் மரபு அன்று தொட்டு இன்றுவரை தொடர்கிறது. மார்கழி நீராடல் செய்வதற்கு திருக்கோயில்களிலே உள்ள நீர்நிலைக்குச் செல்லும் வழக்கமும் உண்டு. குளிரைப் பொருட்படுத்தாமல் நீராடும் மனநிலை. அது வழிபாட்டு நடைமுறையிலே பங்குகொள்ள வேண்டும் என்ற மனஉறுதியை ஏற்படுத்தும். இதைவிட திருக்கோயில்களிலே சென்று தொண்டு செய்யும் வாய்ப்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு நாளும் கோயிலுக்குப் போக வாய்ப்பு இல்லாதவர்கள் மார்கழி மாதத்திலே சென்று வழிபாடு செய்வதற்குப் பெரிதும் விரும்புகின்றனர். மார்கழி மாதத்தை ஒரு 'பீடையான மாதம்' எனவும் கூறும் வழக்கமும் உண்டு. எனவே அந்தப் பீடைமாதத்தில் அது தம்மைப் பீடிக்காமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோயில் நீர்நிலைகளிலே சென்று நீராடுவர். கிராமப்புறங்களில் இந்த நீராடலை 'மார்கழித் தோய்ச்சல்' எனக் குறிப்பிடுவர். மேலும் மார்கழி மாதத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை சிறப்பான வழிபாட்டு நாளாகக் கருதப்படுச் சிறப்பான விடிகாலை நீராடல் செய்யும் வழக்கம் வைணவத் திருக்கோயில்களில் இன்றும் நடைமுறையாக உள்ளது. அன்றைய தினம் நோன்பிருக்கும் வழக்கமும் உண்டு. இந்த வழக்கம் மார்கழி முழுநாளும் நோன்பு இருக்கமுடியாதவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் அதை நிறைவேற்றிய நிலையாக ஏற்பட்டிருக்கலாம்.

எனவே மணிவாசகருடைய திருவெம்பாவை நோன்பை விட ஆண்டாளுடைய திருப்பாவை நோன்பு மக்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தமையால் அந்த வழிபாட்டைத் தொடர மக்கள் இவ்வாறு நாட்குறைப்பை ஏற்படுத்தியுள்ளனர் எனக் கருதமுடியும். ஞாயிற்றுக்கிழமை ஓய்வு நாளாக இருப்பதால் அன்றைய நாளில் திருக்கோயிலுக்குச் சென்று வழிபாட்டு நடைமுறைகளை இடையூறின்றிச் செய்யமுடியும். திருக்கோயில்களில் மார்கழி நோன்பு தனிவழிபாட்டை விடப் பெரும்பயன் தரவல்லது. எல்லோரும் இணைந்து இறைவனை வழிபட வழிகாட்டிய ஆண்டாளும் மணிவாசகரும் தமது பாடல்களால் இக்கருத்தையே வலியுறுத்தியுள்ளனர். எனவே திருக்கோயில் நீர்நிலைகளிலே நீராடி எல்லோரும் இணைந்து பாவைப்பாடல்களைப் பாடி வழிபடுவதால் எல்லோரும் பயனை அடைய முடியும். பாவைப்பாடல்களில் குறிப்பிட்டுள்ள 'மழையை வேண்டுதல்' என்ற நடைமுறை இதனால் செயற்படுத்தப்படுகிறது. ஆண்டாள் பாடலிலே வழிபாடு தனி ஒருவர் நன்மைக்காகச் செய்யப்படுவதன்று. அது வையக நன்மைக்காகச் செய்யப்படுவது. அவ்வாறு வையகம் முழுவதும் நன்மை பெறவேண்டும் என நினைந்து எல்லோரும் கூட்டாக வழிபாடு செய்யும் இடம் திருக்கோயிலாகும். ஆண்டாள் திருப்பாவையில் 'வையத்து வாழ்வீர்கள்' என எல்லோரும் விளித்தே மார்கழி நோன்பின் நடைமுறைகளைப் பாடியுள்ளமையும் இதற்குச் சான்றாகும். மழை வேண்டிப் பாடும் போதும் 'உலகினிற் பெய்திடாய்' என்றே பாடியுள்ளாள். பெண்கள் விடிகாலையில் எழுந்து நீராடி வழிபாடு செய்யும் நடைமுறை கோவில் வழிபாடாக இன்று மாற்ற முற்ற போதும் வழிபாட்டின் நடைமுறைகளை திருக்கோயில்களிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தமிழர் புலம்பெயர்ந்த நாடுகளில் வழிபாட்டிற்காக அமைந்த திருக்கோயில்களிலும் இந்த வழிபாட்டு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. இதற்கு முன்னர் தமிழ் மன்னர்களான ராஜராஜசோழன், ராஜேந்திர சோழன் என்போர் கடல்கடந்த தென்கிழக்கு ஆசிய நாடுகளிலே தமது ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்திய போது அந்த நாடுகளிலும் திருக்கோயில் வழிபாட்டு நடைமுறைகளும் பரவின. அதனால் அங்கு இன்றும் பாவைநோன்பு நடைமுறைகளும் வழிபாடும் தொடர்கின்றன. எனினும் வழிபாட்டு நடைமுறைகள் அந்தந்த நாட்டுப் பண்பாட்டு நிலைகளுக்கு ஏற்ப சில மாற்றங்கள் ஏற்பட்டாலும் இன்னமும் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

| | நாடு | வாழ்வோர் தொகை | | நாடு | வாழ்வோர் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | ஐக்கிய அமெரிக்கா | 200,000 | 16 | டென்மார்க் | 15,000 |
| 2 | அவுஸ்ரேலியா | 100,000 | 17 | தாய்லாந்து | 10,000 |
| 3 | இந்தோனீசியா | 300,000 | 18 | தென் ஆபிரிக்கா | 750,000 |
| 4 | ஐக்கிய அரபுநாடு | 200,000 | 19 | நியூசிலாந்து | 30,000 |
| 5 | ஓமான் | 50,000 | 20 | நெதர்லாந்து | 12,000 |
| 6 | கயானா | 10,000 | 21 | நோர்வே | 15,000 |
| 7 | கனடா | 300,000 | 22 | பிரான்ஸ் | 50,000 |
| 8 | கட்டார் | 10,000 | 23 | பிரிட்டன் | 300,000 |
| 9 | கிரேக்கம் | 10,000 | 24 | பிஜி | 125,000 |
| 10 | குவைத் | 10,000 | 25 | பெல்ஜியம் | 12,000 |
| 11 | சவூதி அராபியா | 50,000 | 26 | மலேசியா | 2250,000 |
| 12 | சிங்கப்பூர் | 300,000 | 27 | மியன்மார் | 600,000 |
| 13 | சுரினம் | 130,000 | 28 | மொறிசியஸ் | 126,000 |
| 14 | சுவிற்செலாந்து | 60,000 | 29 | ரினிடாட் | 100,000 |
| 15 | சுவீடன் | 12,000 | 30 | ஜமேக்கா | 30,000 |
| | | | 31 | ஜேர்மனி | 40,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்து தமிழர் இன்று ஏறக்குறைய முப்பது நாடுகளில் வாழ்கிறார்கள். அண்மையில் (15.09.2014) கனடாவிலிருந்து வெளிவரும் விளம்பரம் என்னும் மூத்ததமிழ் இதழ் பி.பி.சி தமிழோசையின் தகவல் ஒன்றைப் பிரசுரம் செய்திருந்தது. அதன்படி 149 நாடுகளில் தமிழர் வாழ்வது தெளிவாகப்பட்டுள்ளது. ஆனால் இந்நாடுகளில் ஏறக்குறைய 31 நாடுகளில்தான் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் வாழ்கின்றனர்.

மேற்குறிப்பிடப்பட்ட நாடுகளில் வாழும் தமிழர் தமது தாய் மொழியாம் தமிழையும் பண்பாட்டையும் பேணுவதற்குப் பல முயற்சிகளிலே ஈடுபட்டுள்ளனர். தமிழ்மொழியைப் பயிற்றுவதற்குப் பல கற்கை நெறிகளைச் செயற்படுத்துகின்றனர். பல தமிழ்ப் பாடத்திட்டங்களை வகுத்து பாடநூல்களையும் ஆக்கியுள்ளனர். தமிழ் மொழிப் பேணலுக்காக வேறு நிறுவனங்களும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. கருத்தரங்குகளும் உரையாடல்களும் பண்பாட்டு விழாக்களும் இப்பணிகள் பற்றிய விழிப்புணர்வை ஊட்டி வருகின்றன.

இத்துடன் புலம்பெயர் நாடுகளிலே தமிழர் தமது வழிபாட்டு நடைமுறைகளைப் பேணுவதற்காகப் பல திருக்கோயில்களையும் அமைத்துள்ளனர். அக்கோயில்களில் வழிபாட்டு மரபு பேணுவதற்கு நல்ல வாய்ப்புண்டு. சைவ, வைணவ திருக்கோயில்களிலே ஆண்டு தோறும் திருவிழாக்களும் நடைபெறுகின்றன. வழிபாடு தொடர்பான செயற்பாடுகளை அடியார்கள் இடையூறு இல்லாமல் செய்யமுடிகிறது. இதனால் தாயக உணர்வோடு வழிபாடு தொடர்கிறது.

ஆனால் இந்த நிலை எதிர்காலத்தில் இன்றைய இளந்தலைமுறையினரால் தொடரவாய்ப்புண்டா என்ற ஐயப்பாடும் பல நாடுகளில் தமிழர்களிடையே தோன்றியுள்ளது. இன்றைய இளந்தலைமுறை தமிழ்மொழியைப் பிறமொழியாகவே பயின்றுவருகிறது. பண்பாட்டு நடைமுறைகளையும் ஆழமாகப் பின்பற்றும் நிலையில் அவர்கள் இல்லை. தாம் வாழுகின்ற நாட்டு மொழிப் பயிற்சியும் பண்பாட்டுச் செல்வாக்கும் அவர்களைச் சற்று தடுமாறச் செய்துள்ளதெனலாம். மேலைத்தேய நாடுகளில் ஆங்கிலமொழியின் செல்வாக்கால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறை தமிழ்மொழித் தொடர்பாடலையே முற்றாகக் கைவிட்டுவிட்டதெனலாம். இந்நிலையில் அவர்களைத் தமிழ்மொழியையும் தமிழர் பண்பாட்டையும் பேணும் பணியிலே ஈடுபடுத்த வேண்டிய பாரிய பொறுப்பு எமக்கு உண்டு. அந்தவகையில் ஆண்டாள் திருப்பாவையிலே இளம் பெண்களைத் துயிலெழுப்பி இறைவழிபாட்டில் ஈடுபடச் செய்தது போல ஒரு புதிய நடைமுறையை ஏற்படுத்த வேண்டும்.

புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர் இளைய தலைமுறை அந்த நாடுகளின் குடியுரிமை பெற்றவர்களாக இருப்பதால் அவர்களுக்கு பல்பண்பாட்டு நடைமுறைகள் பற்றிய அறிவூட்டல் இன்றியமையாதது. தம்முடைய முன்னோருடைய மொழி, பண்பாடு பற்றி அவர்கள் அறிய வேண்டும். இணையத்தளம் மூலமான தகவல் பரிமாற்றத்தால் மட்டுமன்றி, நேரடியான செயற்பாடுகளிலும் ஈடுபட வேண்டும். அதற்கு அவர்களைத் திருக்கோயில் வழிபாட்டு நடைமுறைகளில் இணையச் செய்வதே சிறந்தது. அங்கு அவர்கள் கிழமையில் ஒரு நாள் ஏதாவது செயற்பாட்டிலே பங்குகொள்ள வேண்டும். வழிபாடு மனித மனங்களை எவ்வாறு பண்படுத்துகிறது என்பதை அவர்கள் உணரும் வகையில் சில செயற்பாடுகளைத் திட்டமிட வேண்டும்.

தமிழருடைய மரபான செயற்பாடுகளைத் திருக்கோயில்களிலே திட்டமிடும் போது இளையோருக்கும் அவற்றிலே பங்குகொள்ள வாய்ப்பு அளிக்க வேண்டும். திருக்கோயில் அமைப்பு, இறைவன் திருக்கோலம், அருட்செயல்கள் போன்றவற்றை அவர்களுக்கு விளக்கமாகப் பயிற்ற வேண்டும். அதற்கென ஓர் அமைப்பு இன்றியமையாதது. இளையோரை அந்த அமைப்பை உருவாக்க வழிகாட்டலாம். சூழ்நிலையிலே அவர்கள் திருக்கோயில் தொண்டுகளைச் செய்யப்பயிற்றலாம். திருக்கோயில்களிலே தூய்மையும் அமைதியும் பேணப்பட அவர்கள் பணி செய்யலாம். வழிபாட்டுக் கிரியைகள் நடைபெறும் வேளைகளில் வீண் வார்த்தைகள் பேசும் பெரியவர்களை இளந்தொண்டர்களே இன்று நெறிப்படுத்த வேண்டும். திருக்கோயிலுக்குச் செல்லும் போது பண்பாட்டு ஆடையுடன் வரும் பழக்கத்தை இளையோர் எல்லோரிடமும் பரவச் செய்யலாம். திருக்கோயில்களுக்கு அணிந்து வரும் மேலங்கிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலணிகளையும் உரிய இடத்திலே நேர்த்தியாக வைப்பதற்கு எல்லோரையும் நெறிப்படுத்தலாம்.

திருவிழாக்காலங்களிலே வரும் மக்கள் கூட்டத்தை நெறிப் படுத்தவும் இளந்தொண்டர்கள் தேவை. பெரியவர்களே சிலர் ஒழுங் கில்லாமல் செயற்படுவதை நாகரிகமாகத்தடுக்க இளையவர் வழி காட்டலாம். இன்னும் இறைவனுக்கு ஆடல், பாடல், நிவேதனம் செய்வதற்கும் இளையவர் முன்வரவேண்டும். இசைக்கருவிகளை இசைக்கும் பணியையும் அவர்கள் செய்யவேண்டும். பிரசாதம் வழங்கும் நிலையில் இளையோர் நல்ல தொண்டாற்றலாம். வாகனத்தரிப்பு, அர்ச்சனைப் பொருட்கள் வாங்குமிடம் என்பவற்றில் இளைஞருடைய சுறுசுறுப்பான செயற்பாடுகள் இன்றியமையாதவை. மேலும் திருக்கோயில் வழிபாட்டு நடைமுறைகளைப் பற்றிய அறிவிப்புக்களைச் செய்வதற்கும் இளங்குரல்களைப் பயன்படுத்தலாம். புலம்பெயர் நாடுகளில் இளையோருடைய பன்மொழிப்புலமை இப்பணிக்குப் பெரிதும் துணை செய்யும்.

திருக்கோயில் நிர்வாக அமைப்புகளிலே சிறப்பாக இளையோரையும் இணைத்துக் கொண்டு ஓர் ஆண்டுக்குரிய திருக்கோயில் வழிபாடுகளை நிரற்படுத்தும் போது இளையோருக்கு ஏற்ற பொறுப்புகளையும் கையளிக்க வேண்டும். ஒவ்வொரு திங்களிலும் நடைபெறும் வழிபாட்டுச் செயற்பாடுகள் பற்றிய தெளிவை அவர்களுக்கு அளிக்க வேண்டும். வழிபாட்டுச் செயற்பாடுகளில் இளையோருடைய தொழில்நுட்ப அறிவை நன்கு பயன்படுத்த திட்டமிட வேண்டும். வழிபாடு பற்றிய அறிவிப்புப் பிரசுரங்களை வழங்கும் பணியில் இளையோர் ஆற்றல் மிகவும் இன்றியமையாதது.

திருக்கோயில் பணிகள் தலைமுறைக் கையளிப்புச் செய்ய வேண்டியவை என்பதை இளைய தலைமுறை நன்கு உணர வேண்டும். அந்தச் செய்தியையே மார்கழித்திங்கள் வழிபாட்டு நடைமுறை மூலம் ஆண்டாளும் மணிவாசகரும் உணர்த்தியுள்ளனர். ஆண்டில் ஒருதிங்கள் முழுவதும் இச் செய்தியை எல்லோரும் உணர இளையோர் வழிபாடு இன்றுவரை தாயகத்தில் தொடர்கிறது. புலம்பெயர் நாடுகளில் கனடா தைத்திங்களை தமிழர் மரபுத்திங்களாகக் கணித்துப் பணி செய்ய வாய்ப்பளித்துள்ளது. மேலைநாடுகளில் இந்த வாய்ப்பைக் கனடாவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழருக்கு முதலில் வழங்கியுள்ளமை தமிழர் பண்பாட்டு மரபிலே ஒரு சிறப்பான பதிவாக அமைந்துள்ளது. இந்த வாய்ப்பைக் கனடாவில் வாழும் இளைய தலைமுறை நன்கு பயன்படுத்த வேண்டும். தமிழரின் மரபான நடைமுறைகளை மீள் பதிவு செய்யவும் செயற்படுத்தவும் ஏற்ற திட்டமிடல் இளையோரால் மேற்கொள்ளப்பட வேண்டும். உலகில் வாழும் ஏனைய இனங்களுக்குத் தமிழரின் இரண்டாயிரம் ஆண்டாகப் பேணப்பட்டு வந்த மரபுகளை அறிவிக்கப் பணிசெய்ய வேண்டும். மார்கழித் திங்கள் ஒரு மரபுத்திங்களாகப் பணி செய்த ஆண்டாளின் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டு தைத்திங்களையும் தமிழர் மரபுத்திங்களாக இளைய தலைமுறை உலகம் அறியச் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

n.



மனிதன் காலத்தின் கடப்பை இயற்கையின் மாறுபடும் தோற்றங்களைக் கொண்டே முதலில் கணித்து வந்தான். ஒரு நாளின் நகர்வை பகலவன் வருகையையும் மறைவையும் கொண்டு அறிந்தான். ஓர் ஆண்டுக் கால அளவை பருவகாலத்தின் மாற்றங்களைக் கண்டு கணிப்பிட்டான். கூர்மையாகப் பொழுது நகர்வதைக் கணிப்பிட மலர்களைத் துணையாகக் கொண்டான்.

ISBN 955439340-7
9 789554 393400

Harikanan, Jaffna.

எங்கட புத்தகங்க..
தமிழர் பண்...
Rs 260.00
906

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org